பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60
Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 39
கதிர் : 126

ஞாயிற்றுக்கிழமை
31 மார்ச் 2024

பங்குனி 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"அப்ப இனிமேல்
எல்லாக் கட்சியளும்
நீதிமன்றங்களில
தான் நிரந்தரமா
நிக்கப்போயினம் போல"

# ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இன, மத மோதல் வெடிக்கலாம்!!!



## எச்சரிக்கிறார் சம்பிக்க

**கொழும்பு, மார்ச் 31**

**ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மீண்டும் நாட்டில் இன, மத வேறுபாடுகள் - முரண்பாடுகள் - மோதல்கள் ஏற்படலாம் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க எச்சரித்துள்ளார்.**

15

செப்ரெம்பரில் ஜனாதிபதித் தேர்தல்


## பொதுவேட்பாளராகவே ரணில் களமிறங்குவார்

கொழும்பு, மார்ச் 31

ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடைபெறும் எனவும், அதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொது வேட்பாளராகவே களமிறங்குவார் என்றும் கொழும்பு அரசியல் உயர்மட்டங்கள் 'உதயனுக்குத்' தெரிவித்தன.

ஜனாதிபதித் தேர்தலா? பொதுத் தேர்தலா? முதலில் இடம்பெறும் என்ற குழப்பம் உருவாகியுள்ள சூழலில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதித் தேர்தலையே முதலில் நடத்துவதற்குத் திட்டவட்டமாகத் தீர்மானித்துள்ளார். அதற்குரிய ஆயத்தங்களை மேற்கொள்ளுமாறும் பணித்துள்ளார்.

15



## பதவிகளிலிருந்து நீக்கம்; நீதிமன்றை நாடுவோம்

கொழும்பு, மார்ச் 31

எதேச்சதிகாரமாகவே நாம் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளோம். எனவே, கட்சித் தலைவரின் முடிவை சட்டரீதியாக நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவோம் - இவ்வாறு அமைச்சர் மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க ஆகியோர் கூட்டாக அறிவித்துள்ளனர்.

சுதந்திரக் கட்சியின் பதவிகளில் இருந்து இவர்கள் 15

## ஆட்சி முறையில் மாற்றம் தேவை

ஈஸ்டர் வாழ்த்தில் மன்னார் ஆயர் தெரிவிப்பு



மன்னார், மார்ச் 31

எமது மக்கள் எதிர்கொள்ளும் துன்பங்களுக்கு நிரந்தரத் தீர்வு காணவேண்டுமாக இருந்தால் எமது ஆட்சி முறைமையில் மிகப்பெரிய மாற்றம் தேவை - இவ்வாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கிறிஸ்தவர்கள் இன்று உயிர்த்த ஞாயிறு தினத்தைக் கொண்டாடுகின்றனர். அதை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது நாடு சமூகப் பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக மிகவும் இக்கட்டான 15

## மரண வீட்டில் கைகலப்பு முல்லையில் அறுவர் காயம்

முல்லைத்தீவு, மார்ச் 31

சுதந்திரபுரம் மத்தியில் நேற்றுமுன்தினம் மரணவீட்டின் இறுதிக்கிரியைகளின்போது ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் 6 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தோரில் நால்வர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

15

வடக்கில் 2023 இல்

## வீதி விபத்துகளில் 201 பேர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31

வடக்கு மாகாணத்தில் கடந்த ஆண்டு இடம்பெற்ற வீதி விபத்துகளில் சிக்கி 201பேர் உயிரிழந்துள்ளனர் என்று வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தால் வழங்கப்பட்ட தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

15

போதைப்பிரச்சினை, பொருளாதார நெருக்கடி

## தமிழகத்தில் நேற்று ஒரு குடும்பம் தஞ்சம்

மன்னார், மார்ச் 31

இலங்கையில் பொருளாதார நெருக்கடி காரணமாக உணவுப்பஞ்சம் ஒருபக்கம் வாட்டிவதைத்து வரும் நிலையில் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் பயன்பாடும் அதிகரித்துள்ளதால் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனாலேயே தமிழ்நாட்டில் அகதியாக தஞ்சமடைந்துள்ளதாக மன்னாரைச் சேர்ந்த குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

15

# சஞ்சீவி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# திடீர் தீப்பரவலால் பனை வடலிகள் நாசம்

வடமராட்சி, மார்ச் 31

வல்லிபுரம் பகுதியில் ஏற்பட்ட தீப்பரவல் காரணமாக பனை வடலிகள் பல எரிந்து நாசமாகியுள்ளன.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் நடந்துள்ளது. திடீரென ஏற்பட்ட தீப்பரவலை அடுத்து, பருத்தித்துறை பிரதேசசபையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தனர்.

பனை வடலிகள் பல தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. அதேவேளை, பாம்புகள் உட்படப் பல ஜந்துகளும் தீயால் உயிரிழந்துள்ளன. தீப்பரவலுக்கான காரணம் தெரியவரவில்லை. (எ-100)

# புலம்பெயர்வால் கால வெற்றிடம்!

## மருத்துவக் கலாநிதி யமுனாநந்தா சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 31

திறமைசாலிகள் நாட்டை விட்டுப் புலம்பெயர்வதால் தமிழ்ச் சமூகத்தில் பெரும் கால வெற்றிடம் ஏற்படுகின்றது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி சி.யமுனாநந்தா சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

புலம்பெயர்ந்து செல்வோரின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. இது தமிழ்ச் சமூகத்தில் பெரும் கால வெற்றிடத்தை உருவாக்கும்.

அதேவேளை, பாரம்பரிய உணவுகளை பேணுவதும் அவசியமாகும். முன்னர் எமது பிரதேசங்களில் பனம் தோப்புகள் காணப்பட்டன. தற்போது பனை மரங்களைக் காண்பது அரிது. பனை மரங்கள் எமது சூழலுக்கு உகந்தவை. பாரம்பரிய உணவுகளை உட்கொள்வதன் ஊடாக ஆரோக்கியமாக வாழ முடியும்- என்றார். (எ-66)



# 'பைப் லைன்' உருவாக்கி கசிப்புக் காய்ச்சிய கில்லாடி

முல்லைத்தீவு, மார்ச் 31

குழாய் இணைப்பின் மூலம் நூதனமான முறையில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் முள்ளியவளை, நீலகண்டபுரத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் ஏற்கனவே சுரங்கம் வெட்டிக் கசிப்புக் காய்ச்சிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவராவார்.

சந்தேகநபர் அவரது வீட்டுக் காணிக்குள் ஆங்காங்கே கோடாவைப் (கசிப்புக் காய்ச்சுவதற்கான முதல்நிலைத் தயாரிப்பு) புதைத்துவைத்து குழாய் இணைப்புச் செய்து அதன்மூலம் கசிப்புக் காய்ச்சி விற்பனை செய்துள்ளார் என்பது பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கோடாவை ஆங்காங்கே புதைத்து வைத்த சந்தேகநபர் குழாய்கள் மூலம் இணைத்து நீரிறைக்கும் இயந்திரத்தைப் பயன்படுத்தி கசிப்பு உற்பத்தியை மேற்கொண்டுள்ளார். வீட்டுக்கான நீர்க் குழாய் இணைப்புப் போன்று வடிவமைக்கப்பட்ட குழாய் இணைப்புகள் மூலம் வீட்டுக்குள் கோடாவைப் பெற்று கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளார் சந்தேகநபர். சந்தேகநபரிடம் இருந்து இரண்டு பரல் கோடா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபரை நீதிமன்றில் சான்றுப்பொருள்களுடன் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ-19)

# ஆயுள்வேத வைத்தியசாலைகளில் மருந்துகளுக்குக் கடும் தட்டுப்பாடு

## நெருக்கடியில் நோயாளர்கள்

கிளிநொச்சி, மார்ச் 31

**கிளிநொச்சியில் ஆயுள்வேத வைத்தியசாலைகளில் மருந்துகள் வழங்கப்படுவதில்லை. பரிந்துரைக்கப்படும் மருந்துகளை வெளியே பெற்றுக்கொள்வதில் நெருக்கடிகளை எதிர்கொள்ளவேண்டியுள்ளது என்று நோயாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

இது தொடர்பில் மருத்துவர்களைக் கேட்டபோது, கடந்த 6 மாதங்களுக்கு மேலாக 50 வீதமான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதே இதற்குக் காரணம் என்று தெரிவித்தனர்.

ஆயுள்வேத வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்களுக்கு வெளியே மருந்துகளைப் பெற்றுக்கொள்ளப் பரிந்துரைக்கப்படுகின்றது. தற்போதுள்ள பொருளாதார நெருக்கடிகளால் மருந்துகளை வெளியே பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று நோயாளர்கள் தெரிவித்தனர்.

நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டால் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவது பாதிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் இருந்து மருந்துகள் எமக்குக் கிடைப்பதில்லை. 50 வீதமான மருந்துகளுக்குத் தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று ஆயுள்வேத மருத்துவர்கள் தெரிவித்தனர். (எ-214)



மாணவர்களின் அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கில், மாந்தை கிழக்குப் பிரதேசசபையால் விநாயகபுரத்தில் பொது நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. உலக வங்கியின் உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் மூலம் நூலகத்தில் மலசலகூடம், குடிநீர், பாதுகாப்பு நடவடிக்கைகள் போன்ற வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன (எ-13)

# புனரமைப்பு தொடர்பான கூட்டம்

கிளிநொச்சி, மார்ச் 31

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான கிராமிய வீதிகள், பாலங்கள் என்பவற்றைப் புனரமைப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

கலந்துரையாடலில் புனரமைப்புத் தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டன. (ப-113)

# குருதிக்கொடை

இணுவில், மார்ச் 31

இணுவில் பகுதியிலுள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையில் அண்மையில் நடந்த ரயில் விபத்தில் உயிரிழந்த இளம் தொழிலதிபர் ஆனந்தராசா சயந்தனின் ஞாபகார்த்த குருதிக்கொடை நிகழ்வு, இணுவில் இந்து விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையில் இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் உறவினர்கள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ப-66)

# படகு வெளியிணைப்பு இயந்திரங்கள் திருட்டு

கொக்குளாய், புளியமுனையில் இரு படகுகளின் வெளியிணைப்பு இயந்திரங்கள் களவாடப்பட்டுள்ளன என்று கொக்குளாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடற்கரை வாடியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு படகுகளின் வெளியிணைப்பு இயந்திரங்களே கடந்த புதன்கிழமை திருடப்பட்டுள்ளன என்று படகு உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த வெளியிணைப்பு இயந்திரங்கள் தலா 9 இலட்சம் ரூபா பெறுமதியானவை என்று கூறப்படுகின்றது. (எ-19)

# சட்டவிரோத மணல்; ஒருவர் கைது

முல்லைத்தீவு, மார்ச் 31

சட்டவிரோதமாக மணல் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கடந்த வியாழக்கிழமை ஒட்டுசுட்டான் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் மணலைச் சேகரித்து டிப்பரில் ஏற்ற முற்பட்டவேளை கைது செய்யப்பட்டார் என்றும், சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் தப்பியோடியுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

22 உழவியந்திரங்களில் இருந்து இறக்கப்பட்ட மணல் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான வழக்கு நீதிமன்றில் தாக்கல் செய்யப்படும் என்று ஒட்டுசுட்டான் பொலிஸார் தெரிவித்தனர். (எ-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எச்.ஐ.வி. உயர்வு

கொழும்பு, மார்ச் 31

கடந்த வருடத்தை விட எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்று தேசிய எய்ட்ஸ் தடுப்புத் திட்டத்தின் பணிப்பாளர் மருத்துவர் ஜானகி விதானபத்திரன தெரிவித்துள்ளார்.

20 முதல் 30 வயதுக்குட்பட்டவர்களே இந்த நோயால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

# பொறுப்புக்கூறலை நிலைநாட்டுங்கள்!

## வலியுறுத்துகிறது மன்னிப்புச்சபை

கொழும்பு, மார்ச் 31

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் உடனடியாகப் பொறுப்புக்கூறல் நிலைநாட்டப்பட வேண்டும். இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் நிகழாதிருப்பதை இலங்கை உறுதி செய்வது அவசியம். இவ்வாறு சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது.**

'தெற்காசியப் பிராந்தியத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தடங்கள்' என்னும் தலைப்பில் சர்வதேச மன்னிப்புச்சபை வெளியிட்டுள்ள தரவு அறிக்கையிலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்ற நாடுகளின் பட்டியலில் இலங்கை இரண்டாவது இடத்தில் உள்ளது. இலங்கை அரசாங்கம் தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் என்ற போர்வையில் அரச பயங்கரவாதத்தைப் பிரயோகிப்பதற்கான ஆயுதமாக காணாமல் ஆக்கப்படுதலைப் பயன்படுத்தி வருகின்றது.

காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்ட வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தப்படுகின்றது. ஆனால் இலங்கையில் அர்த்தமுள்ள பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கான முயற்சிகள் மிகவும் மந்தநிலையிலேயே உள்ளன என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஏ-இ)

# யாழ் வாசி ஒருவருக்கு மாதாந்தம் ரூ.16,604 போதுமாம்!

கொழும்பு, மார்ச் 31

2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது வாழ்க்கைச் செலவு 144 வீதத்தால் உயர்ந்துள்ளது என்று தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முன்னெடுக்கப்பட்ட மாவட்ட மட்டத்திலான மதிப்பீட்டின்படி தேசிய மட்டத்திலான மாதச் செலவு 17 ஆயிரத்து 14 ரூபாவாகக் காணப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தனிநபர் மாதச் செலவு 16 ஆயிரத்து 604 ரூபாவாகவும், கிளிநொச்சி மாவட்டத்தில் 16 ஆயிரத்து 437 ரூபாவாகவும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 16 ஆயிரத்து 894 ரூபாவாகவும், வவுனியா மாவட்டத்தில் 16 ஆயிரத்து 997 ரூபாவாகவும், மன்னார் மாவட்டத்தில் 17 ஆயிரத்து 426 ரூபாவாகவும் காணப்படுகின்றது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஏ-இ)


# பெண் மாபியா கைது சொத்துகள் பறிமுதல்

கொழும்பு, மார்ச் 31

30 வருடங்களாக போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் குடு நோனி என்ற அனோமா கைதுசெய்யப்பட்டுள்ளார். அத்துடன் அவருக்குச் சொந்தமான பல கோடி ரூபா பெறுமதியான வாகனங்கள் மற்றும் சொத்துகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துகள் விசாரணைப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட பெண்ணிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட சொத்துகளின் மொத்தப் பெறுமதி 11 கோடி ரூபாவுக்கும் அதிகம் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)



# வலி.வடக்கு காணிகளில் திருடர்கள் கைவரிசை!

யாழ்ப்பாணம், மார்ச் 31

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலிருந்து வலி. வடக்கில் அண்மையில் விடுவிக்கப்பட்ட காணிகளில் திருட்டுகள் நடக்கின்றன என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

33 ஆண்டுகளாக இராணுவத்தினரின் வசமிருந்த காணிகளின் ஒரு தொகுதி அண்மையில் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டன. அந்தக் காணிகளின் உரிமையாளர்களில் பெரும்பாலானோர் தற்போது வேறிடங்களிலும், வெளிநாடுகளிலும் வசிக்கின்றனர். காணிகளில் இன்னமும் மக்கள் மீள்குடியமராத நிலையில் திருடர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டிவருகின்றனர். இது தொடர்பாகப் பொலிஸாருக்கு அறிவித்தும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (எ-20)

# தடுப்பூசி ஒவ்வாமையால் நோயாளி ஒருவர் மரணம்?

## விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 31

காதில் ஏற்பட்ட நோய்க்குச் சிகிச்சைபெற்ற ஒருவர் மருந்து ஒவ்வாமையால் இறந்தார் என்று சந்தேகிக்கப்படும் நிலையில், சுகாதார அமைச்சு அது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

ராகம போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த 50 வயதுடைய ஆண் ஒருவரே உயிரிழந்துள்ளார். காதில் ஏற்பட்ட நோய்க்காக அவருக்கு 11 தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன என்றும் 12ஆவது தடுப்பூசி ஏற்றப்பட்டபோது ஏற்பட்ட உபாதை காரணமாக நோயாளி உயிரிழந்துள்ளார் என்றும் மருத்துவமனைத் தகவல்கள் கூறுகின்றன. (ஏ-இ)



# தரவுகளின் அடிப்படையில் பிரிட்டன் வழிகாட்டல்கள்

கொழும்பு, மார்ச் 31

இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் பிரிட்டன் பிரஜைகள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று பிரிட்டன் அரசாங்கம் பயண வழிகாட்டல் குறிப்பில் தெரிவித்துள்ளது.

இந்தப் பயண வழிகாட்டல் தங்கள் பிரஜைகளின் பாதுகாப்பை முன்னிறுத்தியது என்றும், இது நம்பத்தகுந்த நிபுணத்துவத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது என்றும் பிரிட்டன் அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை தொடர்பான பிரிட்டனின் பயண வழிகாட்டல் மிகக் கடுமையாக உள்ளது என்றும் அதைத் தளர்த்த வேண்டும் என்றும் பல தரப்புக்கள் கோரிக்கை விடுத்திருந்தன. (ஏ-இ)




# சிங்கப்பூரிலிருந்து குயின் விக்டோரியா

கொழும்பு, மார்ச் 31

சிங்கப்பூரில் இருந்து கொழும்புக்கு 'குயின் விக்டோரியா' என்ற சொகுசுக் கப்பல் நேற்று வந்து சேர்ந்தது.

இந்தக் கப்பலில் ஆயிரத்து 812 சுற்றுலாப் பயணிகளும், 964 பணியாளர்களும் வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் கண்டி, காலி மற்றும் பின்னவல ஆகிய இடங்களுக்குச் செல்வர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)

# காணாமலாக்கப்பட்டோருக்கு நீதிகோரி வவு.வில் போராட்டம்

வவுனியா, மார்ச் 31

காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்தக்கோரியும், காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி கோரியும் வவுனியாவில் நேற்றுப் போராட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக மு.ப. 10 மணிக்கு குறித்த போராட்டம் ஆரம்பமாகி இடம்பெற்றது.

குற்றமிழைத்த நாட்டில் எமக்கான நீதி கிடைக்கப்பெறாது. இதனால் காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில் சர்வதேச விசாரணையே தேவை. ஆதலால் சர்வதேசம் கண்மூடித்தனமாக இருக்காது. எமக்கான நீதியைப் பெற்றுத்தர வேண்டும். எமது போராட்டங்களை நீர்த்துப்போகச்செய்வதற்காக பல அமைப்புகள் முற்படுகின்றன. எனவே குற்றமிழைத்தவர்களை சர்வதேச நீதிமன்றில் பாரப்படுத்தி எமக்கான நீதியை வழங்கவேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னலம் துறந்துவாழ பழகிக்கொள்ளவேண்டும்

*ஈஸ்டர் வாழ்த்துச் செய்தியில் யாழ். ஆயர் தெரிவிப்பு*

**ஒவ்வொருவரும் தன்னலம் துறந்து தந்தையாம் இறைவனின் திருவுளத்துக்கு எம்மை முழுமையாக சரணாகதியாக்கவேண்டும். உயிர்த்த கிறிஸ்துவோடு புதுவாழ்வு பெற்றவர்களாக, புனிதர்களைப் போன்று நாம் கிறிஸ்துவில் வாழ எம்மை நாம் பழக்கிக்கொள்ளவேண்டும்**

- இவ்வாறு தனது உயிர்த்தஞாயிறு வாழ்த்துச் செய்தியில் யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை குறிப்பிட்டுள்ளார்.

அவர் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதாவது:

2024ஆம் ஆண்டுக்குரிய உயிர்ப்பு பெருவிழாவை உலகம் முழுவதும் வாழும் கத்தோலிக்க மக்கள் கொண்டாடும் வேளை இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் இந்த பெருவிழாவைக் கொண்டாடும் அனைவருக்கும் உயிர்ப்பு பெருவிழா நல்வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். கல்லறையின் கதவுகளை உடைத்தெறிந்து உயிர்த்த நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து, சமூகத்தில் நாதியற்று, வாழ வழிதெரியாது அங்கலாய்த்து நிற்போரினதும், தமது மாண்பைப் பாதுகாக்க ஏங்குவோரினதும், ஏழை எளிய மக்களினதும் தேவைகளை நிறைவேற்ற எம் மனங்களைத் திறந்து தனது உயிர்ப்பின் ஒளியால் எம்மையும் எம் மக்களையும் ஒளிபெறச் செய்வாராக.

உயிர்த்த ஆண்டவர் வெறுமனே சாவை வென்றவர் மாத்திரமல்லர். அவர் வாழ்வை மீட்டெடுத்தவர். விண்ணக மகிமையை ஆன்மாக்கள் மீண்டும் பெற்றுக்கொள்ள வழிசமைத்தவர். உயிர்ப்பு என்பது பாவ மன்னிப்பைப் பற்றியது மட்டுமல்ல, மாறாக கிறிஸ்துவுடன் இறந்து உயிர்த்தெழும் ஒவ்வொரு மனிதனுடைய ஆன்மாவின் தற்காலிக மற்றும் நிலையான மாட்சியைப் பற்றியது. நாம் நற்செய்தியில் கவனம் செலுத்தி, இயேசு கற்பித்த படிப்பினைகளையும் அவருடைய முன்மாதிரிகளையும் கருத்தில் கொள்ளும்போது, சிலவேளைகளில் சிலுவை கடினமான செய்தியாகவும், உயிர்ப்பு எளிதான செய்தியாகவும் நமக்கு அமையலாம் - என்றுள்ளது. (ம)

## கடன் நெருக்கடிகள் இல்லாமல் சுபீட்சமான வாழ்வு கிட்டட்டும்!

### *ஆளுநர் ஈஸ்டர் வாழ்த்து*



நாட்டின் கடன் நெருக்கடிகள் நீங்கி மக்களுக்கு சுபீட்சமும் சமாதானமும் நிறைந்த நல்வாழ்வை உயிர்த்த கிறிஸ்து வழங்க வேண்டுமென பிரார்த்தித்து வாழ்த்துகிறேன் என்று தனது உயிர்த்தஞாயிறு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ்.

இது தொடர்பான ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

மானிட குலத்தை மீட்பதற்காக மனித உருவெடுத்துவந்த இறைமகன் கிறிஸ்து, மரணத்தை வென்று உயிர்த்தெழுந்த இன்றைய உன்னதமான நாளை கிறிஸ்தவர்கள் உயிர்த்த ஞாயிறுதினமாகக் கொண்டாடுகின்றனர்.


'சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவை சாவை ஏற்கும் அளவுக்கு கீழ்படிந்தவரானார்' என்ற திருவிவிலிய வாக்கியத்துக்கு அமைய, அடிமைத்தன ஆதிக்கம் செலுத்திய காலத்தில் மீட்பு, சமாதானம், சமத்துவம், அன்பு, நட்புறவு என அனைத்தையும் இந்த உலகுக்கு பரிசளிப்பதற்காக அவமானத்தின் சின்னமாகக் கருதப்பட்ட சிலுவைச் சாவை கிறிஸ்து ஏற்றார். ஆனாலும் இறந்த கிறிஸ்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து சாவின் ஆதிக்கத்துக்கு அந்தம் கொடுத்தார்.

மோசமான பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ள இந்த நாட்டை, பிரஜைகளாகிய நாம் அனைவரும் ஒற்றுமையுடனும், சகிப்புத்தன்மையுடனும் மீட்டெடுத்துவரும் மகிழ்ச்சிகரமான வேளையிலேயே இந்த ஈஸ்டர் பண்டிகையைக் கொண்டாடுகிறோம். நாட்டை உலுக்கிய ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களையும் இந்த வேளையில் நினைவு கூருகின்றேன். அவர்களின் பிரிவின் நிமித்தம் வாடுவோருக்கு பிரார்த்திக்கின்றேன். அனைவர் மனங்களிலும் அமைதியும், மகிழ்வும் பெறுக இத்தருணத்தில் ஈஸ்டர் வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் அக மகிழ்வடைகின்றேன் - என்றுள்ளது. (ம-26)

## நிவாரணம் வழங்கிவைப்பு

மன்னார், மார்ச் 31

போர் காரணமாக மியன்மாரிலிருந்து இடம்பெயர்ந்து இலங்கைக்குக் கடல் மார்க்கமாக வருகை தந்து, பாணந்துறையில் தங்கியுள்ள மியன்மார் முஸ்லிம் மக்களுக்குத் தேவையான நிவாரணத்தை, மன்னார் மெசிடோ நிறுவனத்தின் இயக்குநர் ஜாட்சன் பிகிராடோ தலைமையிலான குழுவினர் கடந்த வியாழக்கிழமை நேரடியாகச் சென்று வழங்கிவைத்தனர். (ப-56)



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். சிலருக்கு எதிர்பார்த்த பணவரவு தாமதமாகும். எதிரிகளால் தொல்லைகள் ஏற்படும். உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும். மகாலட்சுமியை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**இடபம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். திடீர்ப் பணவரவு மகிழ்ச்சி தரும். செலவு செய்யவேண்டி வரும்.

**மிதுனம்:** ஆதரவு உற்சாகம் தரும். தந்தைவழியில் திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும். விநாயகரை வழிபடுவது நலம் சேர்க்கும்.

**கடகம்:** காரியம் இழுபறியாக முடியும். உடல் அசதி உண்டாகும். முருகப்பெருமானை வழிபடுவது நலம் தரும். வியாபாரத்தில் எதிர்பார்த்தபடியே விற்பனை நடப்பதுடன் இலாபமும் கூடுதலாகக் கிடைக்கும். தடைகள் விலகும்.

**சிம்மம்:** பொறுமையைக் கடைப்பிடிக்கவும். புதிய முயற்சியை தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். நிதானம் தேவை. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வழிபாடு மூலம் சிரமங்கள் குறையும்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். மனதில் அடிக்கடி குழப்பம் ஏற்படக்கூடும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தாய்வழி உறவினர்களால் தர்மசங்கடமான நிலைமை ஏற்படக்கூடும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் உண்டாகும். சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் விலகும். துணிச்சலாக முடிவெடுக்கும் திறன் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். உறவுகளுக்காக செலவு செய்ய வேண்டி வரும். சிலருக்கு அவ்வப்போது மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்பட்டு நீங்கும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.


**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். உங்கள் யோசனையை வாழ்க்கைத்துணை ஏற்றுக்கொள்வார். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உண்டு.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும். வீண் அலைச்சலுடன், செலவுகளும் ஏற்படும்.

**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். தீய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். மகிழ்ச்சி ஏற்படும். சுபநிகழ்ச்சி இழுபறியானாலும் சாதகமாக முடியும். பிள்ளைகளால் சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைக்கும்.

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கிளிநொச்சி பாரதிபுர செபஸ்ரியார் வீதியின் பாலம் புனரமைத்தலுக்கான அடிக்கல் நடுகை கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (ப-113)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# வெளிநாட்டு வேலைவாய்ப்பு
## நடமாடும் சேவை வவுனியாவில்

வவுனியா, மார்ச் 31

"நானே ஆரம்பம் வெல்வோம் ஸ்ரீலங்கா ஸ்மார்ட் சூரன்களோடு" எனும் தொனிப்பொருளிலான மக்கள் நடமாடும் சேவை, வவுனியா காமினிம காவித்தியாலய விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

தேசிய மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை அதிதியாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, விருந்தினர்களாக இராஜாங்க அமைச்சர் காதர்மஸ்தான், அபிவிருத்திக்குழுத் தலைவர் கு.திலீபன், மாவட்டச் செயலர் சரத்சந்திர, பிரதேச செயலாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-110).





சாவகச்சேரி பிரதேசசபையின் உள்ளூராட்சி மாத நிகழ்வு, சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் க.சந்திரகுமார் தலைமையில் கொடிகாமம் ஏ-9 வீதியில் அமைந்துள்ள நட்சத்திர மஹால் மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (ப-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதிப் பேச்சுக்கு இஸ்ரேல் தயாராம்!

## அமெரிக்க எதிர்ப்பால் வழிக்கு வந்தது

டெல்அவிவ், மார்ச் 31

**ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையில், இஸ்ரேலுக்கான ஆதரவை அமெரிக்கா விலக்கிக் கொண்டதையடுத்து, போர் நிறுத்தம் தொடர்பான பேச்சுக்கு இஸ்ரேல் சம்மதித்துள்ளது.**

கட்டார் மற்றும் அமெரிக்காவின் இணைத்தலைமையின் கீழ் இந்தப் பேச்சுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இஸ்ரேலின் உளவுத்துறையான மொசாட் அமைப்பின் தலைவர் டேவிட் பர்னேயா தலைமையிலான குழுவினரே இந்தப் பேச்சுக்களில் ஈடுபடவுள்ளனர்.

ஹமாஸும் தன் பிரதிநிதிகளை அறிவித்துள்ளது. இந்தப் பேச்சுகள் இஸ்ரேலில் தற்காலிகப் போர்நிறுத்தமாவது ஏற்படுவதற்கு வழிவகுக்கும் என்று கருதப்படுகின்றது.

வடக்கு காஸா மற்றும் தெற்குக் காஸாப் பகுதிகளில் தனது இராணுவ நடவடிக்கையை மேற்கொண்ட இஸ்ரேல், தற்போது ராபாவில் தரைவழியாகவும் வான் வழியாகவும் தாக்குதல்களை நடத்த ஆரம்பித்துள்ளது.

காஸாவின் இதர பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட போரால் இடம்பெயர்ந்த சுமார் 23 லட்சம் அப்பாவிப் பொதுமக்கள் ராபாவிலேயே தங்கியுள்ளனர்.

இதனால் அங்கு முன்னெடுக்கப்படும் போரை உலக நாடுகள் கடுமையாகக் கண்டித்தன. அமெரிக்காவின் அறிவுறுத்தலைக்கூட இஸ்ரேல் பொருட்படுத்தவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் ராபாவில் போர் நிறுத்தம் செய்யப்படவேண்டும் என்ற தீர்மானத்தை அமெரிக்கா வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி எதிர்க்காமல்விட்டது. இந்தத் தீர்மானம் இஸ்ரேலுக்கு வரலாற்றுப் பின்னடைவாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# இராணுவ நடவடிக்கையை விமர்சித்தவர் சிறைக்குள்!

*ரஷ்ய அரசு அராஜகம்*

மொஸ்கோ, மார்ச் 31

ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கையை விமர்சித்த பத்திரிகையாளர் ரஷ்ய நீதிமன்றத்தால் சிறைக்குள் அடைக்கப்பட்டுள்ளார்.

உக்ரைனுடனான ரஷ்யாவின் போருக்கு கண்டனத்தைத் தெரிவித்து, புடினின் இராணுவ நடவடிக்கையை கடுமையாக விமர்சித்த பத்திரிகையாளரான மைக்கல் பெல்ட்மன் என்பவரே இவ்வாறு இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனையை எதிர்கொண்டுள்ளார்.

உக்ரைனுக்கு எதிரான தனது இராணுவ நடவடிக்கையை விமர்சிப்பவர்களுக்கு எதிராக ரஷ்யா கடும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது. போர் தொடர்பான செய்திகளில், 'ஆக்கிரமிப்பு', 'அத்துமீறல்' என்ற சொற்களைப் பயன்படுத்தவே ஊடகங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ரஷ்யாவின் இராணுவத்தை இழிவுபடுத்தும் வகையிலான கருத்துகளைத் தெரிவிப்பதற்கும் அங்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)




# காஸா போர் தொடர்பில் அமெரிக்கர்கள் கவலை

வொஷிங்டன், மார்ச் 31

காஸாவில் இடம்பெற்றுவரும் போர் தொடர்பில் அமெரிக்கா வாழ் முஸ்லிம்கள் கவலை அடைந்துள்ளதை தாம் ஒப்புக்கொள்வதாக ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு வெள்ளைமாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆதரவு வழங்கிவரும் நிலையில் பலஸ்தீனத்தில் ஆயிரக்கணக்கான முஸ்லிம் மக்கள் படுகொலை செய்யப்படுவதுடன், அவர்களுக்கு எதிரான குற்றச்செயல்களும் அதிகரித்துள்ளன. இதன் காரணமாக முஸ்லிம்கள் மற்றும் போர் எதிர்ப்பாளர்கள் கவலை அடைந்துள்ளனர். இதேவேளை அமெரிக்கா வாழ் முஸ்லிம்கள் மற்றும் அரபு நாடுகளைச் சேர்ந்தவர்கள் போரை உடனடியாக நிறுத்தவேண்டும் என கோரிக்கை விடுத்துவருகின்றனர். உச்சக்கட்டமாக, இஸ்ரேலுக்கு இராணுவ உதவிகளைச் செய்யக்கூடாது எனவும் தற்போது வலியுறுத்தப்பட்டு வருகின்றது. (ம)



# ஒன்ராரியோவில் குரங்கு அம்மை

ஒட்டாவா, மார்ச் 31

கனடாவில், தமிழர்கள் அதிகம் வாழும் மாகாணமான ஒன்ராரியோவில் குரங்கம்மை நோய் தீவிரமாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரொறன்ரோவில் இந்த நிலை மேலும் மோசம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குரங்கம்மை தொற்றுக் குறித்து பரிசோதனைகளை நடத்துமாறு பொதுச் சுகாதார அதிகாரிகள் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளனர். 2023ஆம் ஆண்டுமுழுவதும் 33நோயாளர்களே பதிவாகியிருந்த நிலையில், இவ்வருடத் தொற்றுநிலை அதி அபாயம் மிக்கதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# ட்ரூடோவின் ஊதியம் உயர்கிறது

ஒட்டாவா, மார்ச் 31

கனடாவில் நிலவும் பொருளாதாரப் பாதிப்புகளுக்கு மத்தியில், பிரதமர் ட்ரூடோ உள்ளிட்ட அரசியல் தலைவர்களின் ஊதியம் உயர்த்தப்பட்டுள்ளது. எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி தொடக்கம் இந்தச் சம்பள அதிகரிப்பு நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதமர் ட்ரூடோ வருடாந்த ஊதியமாக தற்போது 3 லட்சத்து 89 ஆயிரத்து 200 டொலர்களைப் பெற்றுவரும் நிலையில், அவருக்கு 4 லட்சத்து 6 ஆயிரத்து 300 டொலர் திருத்தப்பட்ட ஊதியமாக வழங்கப்படவுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொலிவரின் ஊதியம் 2 லட்சத்து 99 ஆயிரத்து 900 டொலராக அதிகரிக்கப்படவுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வருடாந்த சம்பளம் 8 ஆயிரத்து 500 டொலரால் அதிகரிக்கப்பட்டு திருத்தப்பட்ட ஊதியமாக 2 லட்சத்து 3 ஆயிரத்து 100 டொலர் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ம)

# 105 கோடி தொன் உணவுகள் விரயம்

வொஷிங்டன், மார்ச் 31

உலகளாவிய உணவு விரயம் தொடர்பான அறிக்கையை ஐ.நா. வெளியிட்டுள்ளது. இதன்படி 2022ஆம் ஆண்டு உலகளவில் 105 கோடி தொன் உணவுகள் விரயமாக்கப்பட்டுள்ளன என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக அளவில் வீடுகளில் ஒரு நாள் வீணாகும் உணவைக் கொண்டு 100 கோடி மக்களின் பசியைத் தீர்க்கமுடியும். குறிப்பாக, அதிக வெப்ப நிலை நிலவும் நாடுகளில் உள்ள வீடுகளில் தனிநபர் உணவு விரயம் அதிகமாக உள்ளது. அதிக வெப்ப நிலையால், உணவைச் சேமித்து வைப்பது அங்கு சவாலாக உள்ளதால் விரயம் அதிகம் நிகழ்வதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உணவுவிரயம் என்பது உலக அளவில் நிகழ்ந்து வரும் துயரமான விடயம். லட்சக்கணக்கான மக்கள் உணவின்றி பசியில் வாடும் சூழலில், உணவுகள் எந்தக் கணக்குமின்றி வீணாக்கப்படுகின்றன. சுற்றுச்சூழல் சார்ந்தும் இது பாதிப்பை ஏற்படுத்துகிறது. எனவே, உலக நாடுகள் உணவு விரயத்தை கட்டுப்படுத்த இலக்கு நிர்ணயித்து செயற்பட வேண்டியது அவசியம்' என்றும் அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)



# மோடியின் கண்ணீரை அவர் கண்களே நம்பாது

## தமிழக முதல்வர் ஸ்டாலின் விமர்சனம்

மோடியின் கண்ணீரை அவரது கண்களே நம்பாது!. தமிழர்கள் எப்படி நம்புவார்கள்?. என கடுமையாக விமர்சித்துள்ளார் தமிழக முதல்வரான மு.க.ஸ்டாலின்.

தமிழகத்தில் தீவிரமான தேர்தல் பரப்புரைகளை மோடி முன்னெடுத்துள்ளார். அண்மையில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக்கூட்டமொன்றில் பேசிய அவர், தமிழக மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள் என ஒவ்வொரு கருத்துக்கணிப்புகளும் தெரிவிக்கின்றன என்று கடுமையாக விமர்சித்திருந்தார்.

இந்த விமர்சனங்களுக்கே ஸ்டாலின் பதிலடி கொடுத்துள்ளார். மோடியின் கண்ணீரை அவரது கண்களே நம்பாது. தமிழர்கள் எப்படி நம்புவார்கள்? என்று ஸ்டாலின் தெரிவித்துள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


## லூயிகள்- ரணில் - கோத்தாபய

பிரெஞ்சு வரலாற்றில், 15ஆம் லூயியுடையதும் அவன் மகனான 16ஆம் லூயியுடையதும் ஆட்சியைகறுப்புப்பக்கங்கள் என்றுதான் இன்றளவும் அடை யாளப்படுத்துகின்றனர். 15ஆம் லூயியுடைய ஆட்சியில் மக்கள் பசியாற்றுவதற்குப் போதுமான உணவுகள் இருக்கவில்லை. 16ஆம் லூயியோ உணவுகளை மக்களின் கண்ணில் காட்டினாலும் வரிகளால் அவர்களை வதைத்தெடுத்தான்.

மக்கள் இங்கே புல்லைத் தின்கின்றார்கள். அனுதினம் வறுமையாலும் அவல ஆட்சியாலும் வதைபட்டுச் செத்துக்கொண்டிருக்கும் நோயாளிக்கும் பிச்சைக்காரருக்கும் மன்னராயிருப்பவரை 'மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தி' என எவ்வாறழைப்பது? இது பிரான்ஸின் கொடுங்கோலனான 15ஆம் லூயி தொடர்பில் அக்காலக் கவிஞனொருவன் தெரிவித்த கருத்துகளாக அமைகின்றன. 'இரு கழுதைகளை அவன் ஓட்டிச் சென்றான். ஒரு கழுதையின் முதுகில் ஓட்ஸ் தானியங்கள். இன்னொரு கழுதையின் முதுகில் உப்பு வரிச் சீட்டுகள்' என்று 16ஆம் லூயியின் கொடுங்கோன்மை பற்றிக் கட்டியம் செய்தார் கத்தோலிக்க மதகுரு ஒருவர். பிரான்ஸ் போன்று இலங்கையும் இரு லூயிக்களின் பிடியில் சிக்கிச் சின்னாபின்னமாகியது. இன்று செய்வதறியாது திகைக்கின்றது. அவர்களில் ஒருவர் கோத்தாபய, இன்னொருவர் ரணில்.

விடுதலைப்புலிகள் ஆயுத அளவில் மௌனிக்கச் செய்யப்பட்டதன் பின்னரான மஹிந்தவின் ஆட்சிக்காலத்தில் சீனாவின் 'கடனாதிக்கம்' இலங்கையில் அதிகரிக்க ஆரம்பித்தது. இந்த நாடு முதலாளிகளுக்கும், சீன செங்கொடியின் செல்வாக்குக்கும் ஏற்றதாகமாறிநடைபோட்டது. குருவியின் தலையில் வைத்த பனங்காயாக தகுதிக்கும் - திராணிக்கும் மீறிய கடன்சுமைகள் இலங்கைத் தீவை நெருடிக்கொண்டிருந்தன. தொடர்ந்துவந்த கோத்தாபயவின் ஆட்சியில் இந்த நெருக்குவாரங்கள் உச்சம் பெற்றன. இலங்கையர்களுக்கு உணவுப் பொருள்கள்கூட மறுக்கப்பட்டன. தினம்தினம் ஏதாவது ஒரு பொருள் விலையேற்றத்தைச் சந்தித்துக் கொண்டிருந்தது. அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அனுதினம் அதிகரித்துச் சென்றன. கோத்தாபய ஆட்சியிலிருந்து விரட்டப்பட்ட பின்னர், தற்போது இடம்பெற்றுவரும் ரணிலின் ஆட்சியில் மக்களுக்கு உணவுப்பொருள்கள் கிடைக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், 16ஆம் லூயி காலத்தைப்போல்'கழுதைச் சுமைகளாக' வரிகள் வானைப் பிரித்துக்கொண்டு நிற்கின்றன.

இத்தனைக்கும் இந்த வரிச்சுமைகளை இறக்கி வைப்பதற்கு காத்திரமான திட்டங்கள் எதையும் ரணில் அரசாங்கம் எடுத்ததாகத் தெரியவில்லை. சர்வதேச நாணய நிதியம் என்ற ஒன்றே ரணில் அரசாங்கத்தின் ஒற்றைப்பிடிமானமாக இருக்கின்றது. பொருளாதார மீளெழுச்சிக்கு நாணய நிதியத்தின் தலையீடு அவசியமானது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், வரிவிதிப்புக்கு அப்பாற்பட்ட பொருளாதார ஈட்டுகையை ரணில் தரப்பு இன்னமும் உறுதிப்படுத்தவில்லை. நாணய நிதியத்தின் கடன்கள் முற்றாகப் பெறப்பட்ட பின்னர், அந்தக் கடன்களை திரும்பச் செலுத்த வேண்டியதும் அவசியமே. அக்காலத்தில் இலங்கை எதைவைத்து கடன்களை அடைக்கும். வரிகள், கடன்கள் என பழைய பல்லவியே ஆரம்பமாகும். இதனால் வதைபடப்போவது என்னமோ அப்பாவிப் பொதுமக்கள்தான்...!



# தமிழர்களது சுயநிர்ணயத்தை அங்கீகரிக்க வேண்டும் அமெ.

### அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் கோரிக்கை


**கொழும்பு, மார்ச் 31**

**அமெரிக்கா ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும் என்று அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இலங்கையில் ஐ.நா.வின் உண்மை மற்றும் நல்லிணக்க முயற்சிகள் தோல்வியில் முடிந்துள்ளன என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.**

அமெரிக்க இராஜாங்கச் செயலர் அன்டனி பிளிங்கெனுக்கு அனுப்பிய கடிதத்திலேயே அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

ஈழத்தமிழர்களின் சுயநிர்ணயஉரிமையைஆதரித்து, சர்வதேச சட்டங்களின்படி அவர்களுக்குள்ள உரிமைகளின் அடிப்படையில், பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, பொதுவாக்கெடுப்பு முறையை ஆதரிக்கவேண்டும்.

போரின் போது பொதுமக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு விரிவான சர்வதேச விசாரணைகள் வேண்டும். அந்த விசாரணையில் இனப்படுகொலை நடந்ததா என்பது பற்றிய ஆராய்வும் அடங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர். (எ-இ)



## தேங்காய்ப்பால் ஏற்றுமதியில் இலாபம்

கொழும்பு, மார்ச் 31
கடந்த பெப்ரவரி மாதம் தேங்காய்ப் பால் ஏற்றுமதி மூலம் 2 ஆயிரத்து 971 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது என்று தென்னை அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

பெப்ரவரி மாதத்தில் 6 ஆயிரத்து 739 மெற்றிக் தொன் தேங்காய்ப்பால் ஏற்றுமதிசெய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## புதிய வரி

கொழும்பு, மார்ச் 31
எதிர்வரும் ஜனவரி முதல் விசேட வர்த்தக வரியை நீக்கி புதிய வரி அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வரிகளை எளிமையாக்கும் முகமாக இந்தப் புதிய வரி அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (ச-இ)

## மரக்கறி இறக்குமதி செலவு அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 31
இந்த வருடத்தின் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் மரக்கறிகளை இறக்குமதி செய்வதற்கு 62.8 மில்லியன் டொலர் செலவிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் இதே இரண்டு மாதங்களில் 44.1 மில்லியன் டொலரே மரக்கறி இறக்குமதிக்காக செலவிடப்பட்டது என்று இலங்கை மத்திய வங்கி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ச-இ)

## லொத்தர்சபை வருவாய் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 31
40 வருட வரலாற்றில் 2023 இல் அதிகூடிய இலாபத்தை அபிவிருத்தி லொத்தர்சபை பதிவு செய்துள்ளது.

2022 - 2023 ஆம் ஆண்டில் 32 வீத இலாபமீட்டியுள்ளது. இது 2022 இல் பெற்ற இலாபத்தின் இருமடங்காகும்.

லொத்தர் பயனாளிகளின் நன்மைகருதி டிஜிற்றல் தொழில்நுட்பத்தின் ஊடாக லொத்தர் சீட்டுகளை அறிமுகப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அதன் தலைவர் தெரிவித்தார். (ச-இ)

### நாளை

01.04.2024
திங்கட்கிழமை
பங்குனி – 19
சுபநேரம் : 12.11 -01.41
ராகுகாலம் : 07.41 - 09.11

### நாளொரு நல்வார்த்தை

உங்களை வளப்படுத்திக்கொள்ள
அதிக நேரம் செலவழியுங்கள்
மற்றவர்களை விமர்சிக்க
நேரம் இல்லாது போகும்
– கமல்ஹாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணல் அகழ்வைத் தடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தல்

## முல்லை. மாவட்டச் செயலர் தெரிவிப்பு

**முல்லைத்தீவு, மார்ச் 31**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத மணல் அகழ்வுகளைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் பொலிஸார் மூலம் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பாக முல்லைத்தீவு மாவட் டச் செயலக சூழல் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன. அவை தொடர்பில் நடவடிக்கை எடுக்கு மாறு பொலிஸாருக்கு அறிவுறுத் தியுள்ளோம் என்றும் அவர் தெரி வித்தார். அதேவேளை, புதுக்குடி யிருப்பு தேராவில் கிராம அலுவ லர் பிரிவுக்குட்பட்ட நஞ்சுண்டான் குளத்துக்கு அண்மையாக 14 ஆண்டுகளுக்கும் மேலாக மணல் அகழ்வு நடைபெறுகின்றது என்று பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்ற னர்.

இது தொடர்பாக கடந்தகாலங்க ளில் பல மனுக்கள் கையளிக்கப் பட்டபோதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சட்டவிரோத மணல் அகழ்வால் நஞ்சுண்டான் குளத்தின் அனைத்துக் கட்டுமா ணங்களும் அழிவடைகின்றன.

அந்தப் பகுதியில் அனல் அகழ்வைத்தடுத்து நிறுத்த வேண் டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். அது தொடர்பாகவும் பொலிஸா ருக்கு அறிவுறுத்தியுள்ளோம் - என்றார். (ஏ-13)

# கிருமிநாசினி தெளிக்கப்பட்ட 10,000 கோதுமை மா மூடைகள்

## சுற்றிவளைப்பில் சிக்கின

கொழும்பு, மார்ச் 31

மனிதப் பாவனைக்குதவாத 10 ஆயிரம் கோதுமை மா மூடைகள் கெக்கிராவ சுகாதார மருத்துவ அதி காரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றின் பெறுமதி சுமார் 15 கோடி ரூபா என்று தெரிவிக்கப்ப டுகின்றது.

காலாவதியான கோதுமை மா மூடைகள் சந்தையில் விற்பனை செய்வதற்கு தயாராக வைக்கப்பட்டுள் ளன என்று சுகாதார மருத்துவ அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் களஞ்சியசாலை ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட கோதுமை மா மூடைகள் வெளிநாட் டில் தயாரிக்கப்பட்டவை என்றும், கோதுமை மாவில் காணப்பட்ட பூச்சிகளை விரட்ட கிருமிநாசி பயன்ப டுத்தப்பட்டுள்ளமையும் விசாரணையில் தெரியவந் துள்ளது. (ஏ-இ)

# சிக்கினார் குடு மல்லி

கொழும்பு, மார்ச் 31

போதைப்பொருள் வியாபாரி என சந்தேகிக்கப்படும் 'லொகேஷன் குடு மல்லி' பலடகம பொலிஸா ரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

பலடகம பொலிஸ் நிலைய அதி காரிகளுக்குக் கிடைத்த தகவ லின் அடிப்படையில் மேற்கொள் ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் மூலம் பல பிரதே சங்களுக்கு போதைப்பொருள் கள் விநியோகிக்கப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந் துள்ளது. (ஏ-இ)

# பதவிகளிலிருந்து மூவரை தூக்கியது சுதந்திரக்கட்சி

கொழும்பு, மார்ச் 31

நாடாளுமன்ற உறுப்பினர்க ளான துமிந்த திஸாநாயக்க, லசந்த அலகியவண்ண மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியமான பதவிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அனைத்துத் தொகுதி அமைப்பா ளர்கள் மற்றும் செயற்குழு உறுப் பினர்கள் நேற்றுக் கட்சித் தலை மையகத்துக்கு அழைக்கப்பட்டி ருந்த நிலையில் செயற்குழுவில் இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட் டுள்ளன என்று தெரிவிக்கப்படு கிறது. கட்சியின் தேசிய அமைப் பாளர் பதவியில் இருந்து நாடா ளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க நீக்கப்பட்டு, அந் தப் பதவிக்கு மகியங்கனை அமைப்பாளர் கே.பி. குண வர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் லசந்த அலகியவண்ண பொரு ளாளர் பதவியில் இருந்து நீக்கப் பட்டு, அந்தப் பதவிக்கு ஹெக்டர் பெத்மகே நியமிக்கப்பட்டுள் ளார். நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த அமரவீர சிரேஷ்ட உப தலைவர் பதவியில் இருந்தும் நீக்கப்பட்டு, முன்னாள் மேல் மாகாண ஆளுநர் சரத் ஏக்கநா யக்க அந்தப் பதவிக்கு நியமிக் கப்பட்டுள்ளார் என்று தெரிவிக் கப்படுகிறது. (ஏ-இ)

# சிறுவர்கள் மத்தியில் தொற்றுநோய் பரவல்



கொழும்பு, மார்ச் 31

கை, கால், வாய் தொடர் பான தொற்று நோய்கள் சிறுவர்கள் மத்தியில் பரவி வருவதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே மருத்துவமனை யின் குழந்தைகள் நல மருத்துவர் தீபால் பெரேரா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: அண்மைக்காலமாக சிறுவர்கள் மத்தியில் பல்வேறு பட்ட நோய்த் தொற்றுகள் அவதானிக்கப்பட்டுள்ளன. நோயால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு காய்ச் சல், தொண்டை வலி, வாய், கை, கால் மற்றும் பிட்டம் முதலான உறுப்புகளில் கொப்புளங்கள் ஏற்படு கின்றன.

இது சின்னம்மை போன்றது. ஆனால், சின்னம்மை ஏற்பட்டால் மார்பு மற்றும் முதுகில் கொப்புளங்கள் தோன்றும். இது தொற்றக்கூடியது. இதுபோன்ற அறி குறிகள் பிள்ளைகளுக்குத் தென்பட்டால் அவர்களை பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம் - என்றார். (ம)

# மீட்கப்பட்ட இலங்கையர் விரைவில் நாட்டுக்கு

கொழும்பு, மார்ச் 31

மியான்மரில் சைபர் குற்றங்க ளில் ஈடுபடுத்துவதற்கென ஆள் கடத்தல் கும்பலால் கடத்தப்பட்ட 8 இலங்கையர்கள் மீட்கப்பட் டுள்ள நிலையில், அவர்களிடம் பொலிஸார் மேற்கொண்ட விசா ரணைகள் நிறைவடைந்துள் ளன என்று மியான்மருக்கான இலங்கைத் தூதுவர் ஜனக பண் டார தெரிவித்துள்ளார்.

மீட்கப்பட்டவர்கள் விரைவில் நாட்டுக்கு அழைத்துவரப்படுவர் என்றும், மியான்மரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர் கள் 48 பேரும் விரைவில் மீட்கப் படுவர் என்றும் அவர் தெரிவித் துள்ளார். (ஏ-இ)



# 8 ஆம் திகதி சூரிய கிரகணம்

கொழும்பு, மார்ச் 31

எதிர்வரும் 8ஆம் திகதி முழு சூரிய கிரகணம் தோன்றும் என்று விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாஸா தெரிவித் துள்ளது. இந்தச் சூரிய கிரக ணத்தை வட அமெரிக்காவில் மட்டுமே அவதானிக்க முடியும் என்று நாஸா தெரிவித்துள் ளது. (ஏ-இ)

# பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் கைது

கொழும்பு, மார்ச் 31

பாதாள உலக குற்றச் செயற்பாடுகளை ஒடுக்குவதற்கு உருவாக்கப்பட்ட விசேட 20 குழுக்களால் நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் பாதாள உலகக்குழுக்களைச் சேர்ந்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர், மேல் மாகாண தெற்கு குற்றத்தடுப்புப் பிரிவினர் மற்றும் களுத்துறை குற்றத்தடுப்புப் பிரிவுகளைச் சேர்ந்த 20 விசேட குழுக்க ளாலேயே இந்தச் சோதனை நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 19 ஆம் திகதியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த விசேட சோதனை நடவடிக்கைகளில் இதுவரையில் பாதாள உலகக்குழுக்களைச் சேர்ந்த 206 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர். (ஏ-இ)

# கோடரியால் தாக்குதல்; மனைவி சாவு கணவன் படுகாயம்

திருகோணமலை, மார்ச் 31

மதுபோதையில் இருந்த நபரொருவர் கோடரியால் தாக்கியதில் பெண்ணொ ருவர் உயிரிழந்தார். உயிரி ழந்த பெண்ணின் கண வரும் கடும் காயங்களுக் குள்ளாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் திருகோண மலை, அக்போபுரவில் நேற்று முன்தினம் நடந் துள்ளது.

அயல்வீட்டில் வசிக்கும் ஒரு வரே தாக்குதல் நடத்தியுள் ளார் என்று கூறப்படுகின் றது சந்தேகநபர் பொலி ஸாரால் கைது செய்யப்பட் டுள்ளார். (ஏ-இ)

# 798 பேர் கைது

கொழும்பு, மார்ச் 31

நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் நள்ளிரவுவரையான 24 மணி நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட 'யுக்திய' நடவடிக்கையில் 13 பெண்கள் உட்பட 798 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது. (ஏ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மணமக்கள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம். 2002 ஆம் ஆண்டு அவிட்டம் 8 இல் செவ்வாய் (பல்கலைக்கழக மாணவி) மணமகளுக்கு மணமகன் தேவை.
1983 இல் பிறந்த ரோகினி 2 இல் செவ்வாய் அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு: 077 4255 6492

## வீடு வாடகைக்கு

**அம்மன் வீதி, கந்தர்மடத்தில்**
நவீனமுறையில் திருத்தி அமைக்கப்பட்ட நான்கு அறைகளுடன் இணைந்த குளியலறையுடன், இரண்டு வரவேற்பு அறை, சமையலறை மற்றும் வாகன தரிப்பிட வசதிகளுடன்
**வீடு வாடகைக்கு உண்டு.**
(CS/28358) J-1

தொடர்பு:- 076 177 6155

## கடை வாடகைக்கு தேவை

கே.கே.எஸ்.றோட் கோண்டாவில் சந்தியில் இருந்து மருதனார்மடம் சந்திக்கும் இடையில் கடை வாடகைக்குத்தேவை.

தொடர்பு: 076 682 9867

## விற்பனைக்கு

**தோட்டங்கள், விவசாய நிலங்கள் வீட்டுத்தோட்டங்களுக்கு**
தேவையான **வன்னி** எரு வாகனங்கள் மூலம் தேவையான இடங்களில் விநியோகிக்கப்படும். ( 1 Bag 600/=)

தொடர்பு:- 077 885 7406

## வேலையாள்கள் தேவை

கொக்குவிலில் இயங்கிவரும் பிரபல அரிசியாலை ஒன்றிற்கு கனரக சாரதி மற்றும் வெல்டிங் தொழிலாளர்கள் தேவை.
(CS/54549) J-1

தொடர்பு:- 076 096 9728

## வாடகைத்தாய் தேவை


**நல்ல ஆரோக்கியமான உடல்நிலை உடைய வாடகைத்தாய் தேவை.**
(தனிப்பட்ட இரகசியம் காக்கப்படும்).
(CS/54480) J-1

தொடர்பு:- 074 046 5157

## விற்பனைக்கு

உப்புக்கேணி வீதி, பெரிய மாவடி சாவகச்சேரியில் 6 பரப்புக் காணியில் அமைந்த வீடு "குமாரபவனம்" விற்பனைக்கு உண்டு.
கிணறு, இரண்டு குழாய் கிணறு, 2 குளியலறைகள் அடங்கிய வீடு. (கச்சாய் வீதிக்கு அருகாமையில்)
தொடர்புகளுக்கு :
Whatsapp 0033 767 140 453
077 494 8151
(CS/28244) J-1

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலயத்தில் நீண்ட காலமாக அர்ப்பணிப்புடன் பலவகையான தொண்டுகளைச் செய்து ஆலய செயற்பாடுகளுக்கு பெரும் உறுதுணையாக செயற்பட்டுவந்த

**நாராணி கந்தசாமி** அவர்கள்

கடந்த 26.03.2024 அன்று இறைபதம் அடைந்தமையால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கைதடி வீரகத்திப் பிள்ளையாரை பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

பிரிவால் துயருறும்:
**நம்பிக்கைப் பொறுப்பாளர் பரிபாலன சபையினர் கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோயில் முதலாய கோயில்கள்.**
(cs.54580) (N-1)

## மதிப்புக்குரிய நாளைய தலைவர்களே நீங்களும் உங்களது கனவுகளை நனவாக்க

**LOLC உடன் இணையுங்கள்**



பணிநிலை வெற்றிடங்கள்

- FINANCIAL PLANNERS
- ASST SALES MANAGER
- SALES MANAGER
- ASST REGIONAL SALES MANAGER
- துப்பரவு பணியாளர்கள்

PALALI ROAD, KONDAVIL.
076 882 0551
(cs.54582) (N-1)

## காணி விற்பனைக்கு

இராமா கோயில் கொடிகாமத்தில் 5 1/4 பரப்பு உறுதிக் காணி விற்பனைக்குண்டு. கடை வீடு கட்டுவதற்கு ஏற்றது.

யாழ். தென்மராட்சி அல்லாரைப் பகுதியில் 17 பரப்பு உறுதிக்காணி 4 3/4 பரப்பு பகுதி பகுதியாகவோ முழுமை யாகவோ விற்பனைக்கு உண்டு. காபெற் வீதியில் அமைந்துள்ளது. தென்னை, வேம்பு மரங்கள் உண்டு. **கட்டடங்கள் கட்டக்கூடியது.**

தொடர்பு: 071 444 5866 / 077 427 8033

## மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 08 . 1946



மறைவு
29 . 03 . 2024

**விநாயமூர்த்தி கனகாம்பிகை (பிள்ளையம்மா)**

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், இல 6 பழம் வீதி கந்தர்மடம் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி கனகாம்பிகை நேற்று முன்தினம் (29.03.2024) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - யோகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தியின் அன்பு மனைவியும், தங்கமலர், ரஞ்சினிதேவி, தர்மராணி, சரோஜினிதேவி, காலஞ்சென்ற வரதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராசேந்திரன், பரமலிங்கம், கந்தசாமி, கெங்காதரன், சுமதி ஆகியோரின் மைத்துனியும், அஞ்சனா, மோகனா, துஸ்யந்தன், மிருகு சுதர்சன், ராஜி, ரமேஸ், ராதிகா, ராஜன், மெனுசா, துனிசியா, சம்பேர்ஸ், பிரசாத், பிரதீபன் ஆகியோரின் பெரியம்மாவும், வதனா, சோனியா, செந்தூரன் லாவணியா, லாலா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.04.2024) திங்கட்கிழமை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**கந்தசாமி - ராணி குடும்பம்**
077 527 7329

**இல 6 பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
(CS/54588) J-1

## விண்ணக வாழ்வின் பதினாறாம் வருட நினைவஞ்சலி

பிறப்பு
20 - 06 - 1938



இறப்பு
31 - 03 - 2008

**அமரர் சுப்பிரமணியம் யோசேப் பூராசா**

**(ஓய்வுபெற்ற அதிபர், முன்னாள் செயலாளர், புனித அந்தோனியார் ஆலயம், முன்னாள் இயக்குநர் புனித அந்தோனியார் தெய்வக்குழந்தைகள் இல்லம்)**

" உயிர்த் தெழுதலும் வாழ்வும் நானே - என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார் "
(யோவா 11:25)

[illegible] 02

**என்றும் நீங்கா நினைவுகளுடன் குடும்பத்தினர்**
(CS 54565) N-1

# அக்கராயன் கிழக்குக்கு பேருந்துச்சேவை தேவை

வன்னேரிக்குளம், மார்ச் 31

கிளிநொச்சி, அக்கராயன் கிழக்குக்கு பேருந்துச் சேவைகள் நடத்தப்படவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மேற்குக்கான பேருந்துச்சேவைகள் கிளிநொச்சியில் இருந்து ஆரம்பித்து கோணாவில், ஸ்கந்தபுரம், அக்கராயன் வழியாக முழங்காவில் வரை நடைபெறுகின்றது. கோணாவிலில் இருந்து யூனியங்குளம், அக்கராயன் கிழக்குப் பகுதிகளுக்கான பேருந்து சேவைகள் இடம்பெறாததன் காரணமாக அந்தப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் அந்தப் பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளுக்குக்கூட நடந்துசெல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

தற்போது அக்கராயன் கிழக்குக்கான வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ள போதிலும் பேருந்து சேவைகள் நடைபெறுவதில்லை.

இந்த நிலையில் அக்கராயன் கிழக்குக்கான பேருந்துச் சேவைகளை நடத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ம-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
28.03.2023 முதல் சித்திரைப்புத்தாண்டு வரை

ஆடைகளின் சாம்ராஜ்யம்

இந்தியன் செலக்ஷனின்

சித்திரைப் புத்தாண்டு

ஆடைக் கொண்டாட்டம்



திருமணப்பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள், டொப் வகைகள், சேட், ரீ சேட், பாட்டி புரொக், லெஹங்கா மற்றும் ஏராளமான ஆடைத் தெரிவுகளைப் பெற்றுக்கொள்ள இன்றே முந்திக்கொள்ளுங்கள்

விசேட விலைக் கழிவு


ரெடிமேற் கொட்டன் சல்வார்
ரெடிமேற் நெற் சல்வார்
500/=

28.03.2024 முதல்
சித்திரைப் புத்தாண்டு வரை
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)

இந்தியன் செலக்ஷன்

இடம் : வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

1 ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 26 . 10 . 1950
இறப்பு 31 . 03 . 2023

அமரர் சுப்பிரமணியம் ஜானகி (ரூத்)

அம்மா. எங்கள் அன்புத் தெய்வமே!
கண் முன்னே வாழ்ந்த காலங்கள்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்தாலும்
நீங்கள் விண் நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல் கனகாலம்
எங்கள் மனதிலே இருப்பீர்கள்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனை வேண்டிநிற்கும்

பிள்ளைகள், மருமகன்கள்,
[illegible]

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

(CS/28371) J-1

# வருடாந்தக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

யாழ்., மார்ச் 31

உரும்பிராய் ஞான வைரவ கோவிலடி சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சனசமூக நிலைய மேல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ)

Accurate Laboratory Service
77, Kandy Rd, Chundikuli, Jaffna.

➤ 15% விலைக்கழிவில் இரத்தம்,மலம், சலம் சோதித்துத் தரப்படும்.
➤ வீட்டிற்கு வந்து இரத்த மாதிரிகள் பெறப்படும்.
(நிபந்தனைக்குட்பட்டது)

Phone:
077 281 1234
021 221 1239



(CS/54548) J-1

SALES EXECUTIVES - Jaffna

(அழகுசாதன மற்றும் சரும பராமரிப்பு பொருட்கள்)
(Cosmetics / Dermatological)

பல்வேறு துறைகளில் முன்னோடியாக விளங்கும் JANATHA நிறுவனத்தின் மற்றொரு வளர்ந்து வரும் Hemka Pharma நிறுவனத்திற்கு திறமையான SALES EXECUTIVES யாழ்ப்பாணத்தில் தேவைப்படுகின்றனர்.

- அழகுசாதனப் பொருட்கள் விற்பனையில் 2 வருட அனுபவம் அவசியம்.
- சிறந்த விற்பனைத் திறமை மற்றும் விற்பனைத் தொடர்புத் திறன் (communication skills) அவசியம்.
- Riding / Driving License தேவை.
- வயது 40 க்கு கீழ் விரும்பத்தக்கது.
- யாழ்ப்பணத்தை அண்மித்த பகுதிகளுக்கு பிரயாணம் செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(CS/54564) (N-1)


Phone Number: - 0773045177 / 0768173263
Email: hemkapharma@gamil.com
janathavignesh1207@gmail.com

## அலங்கார உற்சவம்

யாழ்., மார்ச் 31

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் திருவருள்மிகு கண்ணகியம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை சப்பரத் திருவிழாவும் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு கண்ணகியம்மன் எழுந்தருளி ஆலய பித்தார்கேணியில் தீர்த்தோற்சவமும் இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (இ-இ)

பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 04 . 11 . 1935
மறைவு 22 . 03 . 2014

அமரர் தம்பு நடேசு
( Retired Senior Tax Officer, Department of Inland Revenue )

திதி: அபர பக்க சஷ்டி
31.03.2024

அப்பா நீங்கள் எமைப் பிரிந்து பத்து ஆண்டுகள்
கடந்து சென்றாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் இதயங்களில் என்றும் நிலைத்திருக்கும்.
காலங்கள் கரைந்தாலும் ஆயிரம்
உறவுகள் அருகிருந்தாலும் எம்
கண்களில் ஒளிரும் உங்கள் அன்பின் வெளிச்சம்.

381, கொழும்புத்துறை வீதி,
[illegible]

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(CS/54538) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 03 . 1945



மறைவு 29 . 03 . 2024

## புஸ்பராஜா தருமநாயகி

அராலி மத்தி, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பராஜா தருமநாயகி அவர்கள் நேற்று முன்தினம் (29.03.2024) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், சின்னத்துரை புஸ்பராஜா (ஓய்வு பெற்ற தொழில்நுட்பவியலாளர்) அவர்களின் அன்பு மனைவியும், கந்தராசா அவர்களின் அன்புச் சகோதரியும், கோபிநாத் (நியூசிலாந்து), விஷ்வநாத் (நியூசிலாந்து), பிறேம்நாத் ஆகியாரின் அன்புத்தாயாரும், பிரகாசினி, புவனேஸ்வரி, ஜிந்துஜா (உதவி முகாமையாளர், மக்கள் வங்கி) ஆகியோரின் அன்பு மாமியாரும், கஞ்சுகன், காவியா, சேயோன், சாத்வி, ரஷ்மிகன், தன்ஷிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.04.2024) திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை
077 936 0001

தகவல்:
குடும்பத்தினர்

(CS 54593) S-1

**உடனடி வேலைவாய்ப்பு**

புதிதாக திறக்கப்பட்டுள்ள கம்பனிக்கு உள்ளக, வெளியக, பகுதி நேர வேலைவாய்ப்புகள் உள்ளன.
துப்புரவு பணியாளரும் தேவை.

**076 112 4145**

**தென்னந்தோட்ட பணியாளர்கள் தேவை**

பளையில் அமைந்துள்ள தென்னந் தோட்டத்தில் குடும்பமாக தங்கி நின்று **வேலை செய்ய வேலையாட்கள் தேவை.** (ரக்டர் ஓடத்தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது).

**077 651 0696, 071 902 5745**

(CS/28373) J-1

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 31 . 12 . 1960



ஆண்டவன் அடியில் 31 . 03 . 2021

திதி: திருதியை ( நினைவு நாள் 28.04.2023 )
செட்டிச்சோலை அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்டு சிறப்புற இனிதே
இப்பூவுலகில் வாழ்ந்து மறைந்த

**அமரர் முருகதாஸ் சந்திரவதனா**
அவர்களை நினைவு கூருகின்றோம்.

ஆண்டுகள் மூன்று ஆனபோதும் - அம்மா
உங்கள் நினைவுகள் - ஆறவில்லை எம் துயர்
எத்தனை ஆண்டுகள் சென்றிடினும்
நீங்காது நிலைத்திருக்கும் உங்கள் நினைவுகள்

ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றும்
பிரார்த்திக்கின்றோம்

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS/54586) J-1

# புதிய நெடுஞ்சாலை விரைவில் பாவனைக்கு

கொழும்பு, மார்ச் 31

களனிப்பாலத்தையும் காலிமுகத்திடலையும் இணைக்கும் உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை அடுத்த சில மாதங்களில் பொது மக்கள் பாவனைக்காக திறந்து விடப்படவுள்ளது. இந்த நெடுஞ் சாலை கட்டுமானப்பணிகள் 2019ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இம் மாதம் கட்டுமானப்பணிகள் முடிவடையும் என எதிர்பார்க்கப்பட்டபோதும், ஒரு சில காரணங்களால் அது தாமதமாகியுள்ளது. அடுத்த மூன்று மாதங்களுக்குள் இந்த நெடுஞ்சாலை பொதுமக்கள் பாவனைக்கு திறந்து விடப்படும் என உயர் அதிகாரி ஒரு வர் தெரிவித்துள்ளார்.

5.3 கிலோமீற்றர் நீளமான இந்த நெடுஞ் சாலை கட்டு நாயக்க அதிவேக நெடுஞ் சாலையையும் காலிமுகத்திடலையும் (கொழும்பின் மையப்பகுதியையும்) இணைக் கும் வகையில் அமைந்துள் ளது. கொழும்பு துறைமுகமும் இந்த நெடுஞ்சாலையுடன் இணைக்கப்பட்டுள் ளது. இதனால் பிராந்திய வர்த்தக நடவ டிக்கைகள் விரிவடையும் எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது. (எ-6)

## ஆலய வருடாந்த ஊர்வலம்

பங்குனித் திங்களை முன்னிட்டு கோண்டா வில் கிழக்கு நாகபூசணி அம்பாள் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ மகா காளி அம்பாள் ஆலய வருடாந்த ஊர்வலம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது. தொடர்ந்து மகேஸ்வர பூசையும் (அன்னதானம்) இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள் ளது. (ம-66)

# மரண அறிவித்தல்



## இராமலிங்கம் பூரணம்

**(விளானை களபூமி காரைநகர்)**

பொன்னாவளை, களபூமி, காரைநகரை பிறப்பிடமாகவும் விளானை, களபூமி, காரைநகரை வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் பூரணம் நேற்று (30.03.2024) சனிக்கிழமை காலை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலம்சென்ற இராமலிங்கம் (ஓய்வுநிலைஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலம்சென்ற தாமோதரம்பிள்ளை ஆறுமுகம் - சுந்தரம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலம்சென்ற வைத்திலிங்கம் - சுந்தரி தம்பதியரின் அன்பு மருமகளும், காலம்சென்றவர்களான சபாரத்தினம், கனகரத்தினம், சண்முகநாதன், மகாதேவா, குமாரசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அம்பிகைபாகன், காலம்சென்ற வைத்தியநாதன் (காரை.பலநோக்கு கூ.சங்கம்) மற்றும் கமலாதேவி, பாலகிருஸ்ணன் (பொறியியலாளர் - அவுஸ்திரேலியா), காலம்சென்ற குகதாசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், புஸ்பமலர், காலம்சென்றவர்களான சிவஞானம் (V.C), நிர்மலா, ஆகியோரின் அன்புமாமியாரும், மனோராஜ் (லண்டன்), தனுசா (லண்டன்), தர்சிகா (அவுஸ்திரேலியா), கோபி (கொழும்பு), கபிலன் (சமுர்த்தி உத்தியோகத்தர் - ஊர்காவற்றுறை), நிசாந்தி (லண்டன்), துசியந்தன் (அவுஸ்திரேலியா), துஷிகா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு பேர்த்தியரும், James, கௌதமன், விக்கிரமன் , ஆதிரா, பிரணவ், ரக்ஷிகா, ஐஸ்விகா, ஆரியன், அரன், ஆரன், சேயன், விபிஷா, ராகுல் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.04.2024) .திங்கட்கிழமை காலை 7.30 மணியளவில் அவரது விளானை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக களபூமி தில்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


விளானை,
களபூமி, காரைநகர்.

தகவல்:
மகன் - பாலகிருஸ்ணன் - 077 832 9499

(CS/28375) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 11 . 1941



மறைவு 29 . 03 . 2024

## இளையதம்பி ஆனந்தன்

(ஓய்வு பெற்ற உப அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, முன்னாள் தலைவர், சாளம்பை முருகன் ஆலயம், மல்லாகம், தற்போதய பரிபாலன சபை ஆலோசகரும், சமாதான நீதவானும்)

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி ஆனந்தன் அவர்கள் நேற்று முன்தினம் (29.03.2024) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் மீனாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - ஆசைப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற இராமைய்யா - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற செல்வராஜா (ஓய்வு பெற்ற அதிபர்), கருணாநிதி (ஓய்வு பெற்ற முகாமையாளர், மக்கள் வங்கி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மனோகரன், கமலாம்பிகை, சுசீலா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுகந்தி, சுதர்சன், சுகிர்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானராசா, அஃசா, அனிஸ்ரா ஆகியோரின் அன்பு மாமனாரும், நிதர்சினி, யாழினி, அக்தாஸ், அயிடான் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2024) ஞயரிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப 11.00 மணியளவில் மல்லாகம் இந்துப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 28372) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டாம் நாள் நினைவஞ்சலி



## குழந்தைவேலு கனகபூசணம்

உங்கள் பிரிவு தந்த சோகங்கள்,
வடுக்களாய் நெஞ்சமதில்
என்ன சொல்லி ஆறுவது
மனதிலே எப்போதும் அழியாத
உங்கள் நினைவுகள் நாதமாய்
இசைமீட்டி நிற்குதம்மா!
என்றும் உங்கள் நினைவுகளுடன்!
ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

(CS/54578) J-1


தோற்றம் 02.01.1939 — மறைவு 23.03.2024

பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.



## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 07 . 1954



மறைவு 29 . 03 . 2024

### சோதிராசா ரவீந்திரராணி (சக்கரை)

மானிப்பாய் வடகிழக்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோதிராசா ரவீந்திரராணி (சக்கரை) நேற்று முன்தினம் (29.03.2024) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சோதிராசாவின் அன்பு மனைவியும், நிரோஷினியின் பாசமிகு தாயாரும், செல்வகுமாரின் அன்பு மாமியாரும், ஜெவிகாந்த், றேவிக்கா, அபிநிஷா ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P.: 075 013 9415

தகவல்: குடும்பத்தினர்




சர்வமதத் தலைவர்கள் மற்றும் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரின் பங்குபற்றுதலுடன் வவுனியா மாவட்டச் செயலகத்தில் இப்தார் நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. வவுனியா மாவட்டச் செயலர் பீ.ஏ.சரத்சந்திர தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், இந்து, பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய மத குருமார்கள், கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், பொலிஸ் அதிகாரிகள், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-18)




பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக பன்னாட்டு மகளிர்தின விழா பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. பிரதேச செயலர் இ. த ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக பளை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் ஏ. கே.ஹெபாவ மெபன்டா, சிறப்பு விருந்தினராக பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை செயலர் திருமதி தர்சினி தயானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். பிரதேசத்தைச் சேர்ந்த மூத்த மகளிர் மூவருக்கு பச்சிலைப்பள்ளி விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன. (எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பஞ்சராகியது பஞ்சாப்

லக்னோ அணியுடனான நேற்றைய ஆட்டத்தில் 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது பஞ்சாப் கிங்ஸ் அணி.

ஐ.பி.எல். தொடரின் 11 ஆவது ஆட்டம் லக்னோ சுப்பர் ஜெயன்ட் அணிக்கும், பஞ்சாப் கிங்ஸ் அணிக்கும் இடையில் லக்னோவில் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற லக்னோ அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 199 ஓட்டங்களைக் குவித்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் குயின்டன் டி கொக் 38 பந்துகளில் 54 ஓட்டங்களைக் குவித்தார். அணித் தலைவர் பூரன் 21 பந்துகளில் 42 ஓட்டங்களையும், குருநல் பாண்டியா 22 பந்துகளில் 43 ஓட்டங்களையும் அதிரடியாகப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் சாம் கரன் 28 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலளித்த பஞ்சாப் அணிக்கு ஆரம்ப இணையான சிகர் தவான், பெயாஸ்ரோ சிறப்பான அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றியிலக்கை விரட்டிச் சென்றது. தனித்து நின்று அணித் தலைவர் தவான் போராடியபோதும் லக்னோ அணியின் மயங் யாதவின் வேகப் பந்து வீச்சுக்கு சீரான இடைவெளியில் இலக்குகள் சரிய அந்த அணியால் 20 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 178 ஓட்டங்களை மாத்திரமே பெறமுடிந்தது. துடுப்பாட்டத்தில் தவான் 50 பந்துகளில் 70 ஓட்டங்களையும், பெயஸ்ரோ 29 பந்துகளில் 42 ஓட்டங்களையும், லிவ்விங்ஸரன் 17 பந்துகளில் 28 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். மயங் யாதவ் 27 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளைக் கைப்பற்றினார். (ஒ-5)

# ஆபத்தான வழியில் செல்கின்றது அரசு!

## சட்டத்தரணி ஏமக சேனாநாயக்க எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 31

பொதுத் தேர்தலை நடத்துவதா அல்லது ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதா என்பது தொடர்பில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காத இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவர்களிடம் அரசாங்கம் ஆலோசிக்கின்றது என்று சட்டத்தரணி ஏமக சேனாநாயக்க குற்றஞ்சாட்டியுள் ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் ஆணை பெற்றவர்களிடம் இந்த விடயங்கள் ஆலோசிக்கப்படுவதில்லை. இரட்டைப் பிரஜா உரிமை கொண்ட, அரசாங்கத்தில் அங்கம் வகிக்காதவர்களிடமே ஆலோசனை பெறப்படுகின்றது. அரசாங்கத்தின் இவ்வாறான செயற்பாடுகள் ஆபத்தானவை.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல், மாகாணசபைத் தேர்தல் போன்று ஜனாதிபதித் தேர்தலுக்கு திகதி நிர்ணயம் செய்யமுடியாது. அரசமைப்புக்கு அமையவே ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி நிர்ணயிக்கப்படவேண்டும். அரசமைப்பு மீறப்படுவது பாரதூரமான குற்றமாகும் - என்றார். (எ-இ)

**வேலையாட்கள் தேவை**

- Admin
- Receptionist

Send Your CV to this Whatsapp number : 076 124 1561

Betta College international,
K.K.S Road, Kondavil.
(CS/28374) J-1

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் நாவலர் வீதியில் றோட்டுப் பக்கமாக 3 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

நேசன்: 077 658 9694

முக்கிய அறிவித்தல்
-தரகர்கள் தேவையில்லை-

# சேவைநலன் பாராட்டு




## திருமதி நளினிகலா தவராசா (SLTS-I)

சிரேஷ்ட ஆசிரியர்-மனைப் பொருளியல் யா/கைதடி நுணாவில்
அ.த.க பாடசாலை

**சேவை விபரம்**

| | | |
|---|---|---|
| ➤ யா/ மந்துவில் றோ.க.த.க. பாடசாலை | - 17.08.1988 - 03.4.1991 | வரை |
| ➤ யா/ கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி | - 04.04.1991 - 31.12.1992 | வரை |
| ➤ யா/ மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம் | - 01.01.1993 - 31.12.1994 | வரை |
| ➤ யா/ கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் | - 01.01.1995 - 09.02.1997 | வரை |
| ➤ யா/ மடுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம் | - 10.02.1997 - 26.02.2015 | வரை |
| ➤ யா/ கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை | - 27.02.2013 | இன்றுவரை |

எமது பாடசாலையில் கடந்த 20 வருடங்களிற்கு மேலாக பகுதிநேர மற்றும் நிரந்தர ஆசிரியராக சேவையாற்றி இன்றுடன் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி நளினிகலா தவராசா அவர்கள் எல்லா நலன்களும் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:


ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை.

(CR 42111) (V.1)

# மரண அறிவித்தல்

## நாகமணி சபாரத்தினம்

(ஓய்வுபெற்ற பொதுமுகாமையாளர் பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்)



தோற்றம் 05.04.1954 — மறைவு 30.03.2024

மாதகல் மேற்கு மாதகலை பிறப்பிடமாகவும் பட்டினசபை ஒழுங்கை மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட க.நா.சபாரத்தினம் அவர்கள் 30.03.2024 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி-இளையாச்சி தம்பதிகளின் அன்பு புதல்வனும், அன்ரன் ஞானராஜா மற்றும் காலஞ்சென்ற பாக்கியம் தம்பதிகளின் பாசமிகு மருமகனும், ஜயந்தினியின் அன்புக் கணவரும், அன்னப்பிள்ளை, காலஞ்சென்ற அருணாசலம் மற்றும் நாகரத்தினம், இராசமணி, முத்துப்பிள்ளை(ஓய்வுபெற்ற தபாலதிபர், மானிப்பாய்), நவமணி (ஜேர்மனி), கடம்பமலர் (ஜேர்மனி), ஆகியோரின் அன்புச் சகோதரரும், கமலராஜ், சுபோதினி (லிகிதர், பண் பரிஷ் ப.நோ.கூ.ச), கிருசாந்தன் (உதவி அதிபர் மகாஜனா கல்லூரி) அவர்களின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பட்டினசபை ஒழுங்கை மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் 31.03.2024 இன்று முற்பகல் 10.00 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 28383) V-1

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள Bajaj Platina - 100 CC மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 078 647 5419

(CS/27223) J-1

**மணமகள் தேவை**

யாழ். இந்து (V) கொழும்பில் பிறந்தவர், ஆயிலியம் கடகம் 28 வயது அழகிய **மணப்பெண் தேவை.** சீதனம் தேவை இல்லை.

தொடர்பு:- 076 916 7175

**மணமகன் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம் (V) 1992 இல் பிறந்த **மணமகளுக்கு மணமகன் தேவை.** (கொழும்பில் வீடு. சீதனம் வழங்கப்படும்). லக் செவ், பூரட்டாதி, மீனம், 32 வயது (Divorce).

தொடர்பு:- 077 627 7239

(CS/54551) J-1

**வீடு வாடகைக்கு**

நல்லூர் கோவிலுக்கு அருகாமையில் நான்கு படுக்கை அறைகள், இரண்டு குளியலறை, சமையலறைகளுடன் கூடிய மாடி வீட்டின் கீழ்ப்பகுதி வாகனத் தரிப்பு வசதியுடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 077 350 1812

(CS/54587) J-1

**வாடகைக்கு**

யாழ் வைத்தியசாலை வீதியில் 1ம் மாடி கட்டடம் வாடகைக்கு உண்டு. கடைகள், அலுவலகங்களுக்கு ஏற்றது.

தொடர்பு:- 077 162 0628

(CS/54591) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## யாழ். நகரப் பகுதியில் சிரமதான நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 31

சர்வதேச சுழிய கழிவு தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணம் மாநகரசபை, இந்தியத் துணைத் தூதரகம் மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸார் இணைந்து யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நேற்று சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

நிகழ்வில் இந்தியத் துணைத் தூதர், யாழ்ப்பாணம் பொலிஸார், தொல்பொருள் திணைக்கள உத்தியோகத்தர்கள், கல்லூரி மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

உக்கக்கூடிய பொருள்கள், உக்காத பொருள்கள் என்பன பிரித்தெடுக்கப்பட்டுக் கழிவு முகாமைத்துவம் செய்யப்பட்டதுடன், விழிப்புணர்வு சைக்கிள் ஓட்ட நிகழ்வு இடம்பெற்றது. (எ-23)

## இலங்கையில் மிளகு மாநாடு

கொழும்பு, மார்ச் 31

அமைச்சரவை அனுமதியுடன் ஐம்பத்திரண்டாவது சர்வதேச மிளகு மாநாடு விவசாயப், பெருந்தோட்டத் துறை அமைச்சரின் தலைமையில் நடைபெறவுள்ளது. மிளகு ஏற்றுமதி மற்றும் விற்பனை போன்றவற்றில் எதிர்நோக்கப்படும் தடைகளை நீக்குவதுடன் மிளகுக்கு உரிய விலையைப் பெற்றுக்கொடுப்பதே இந்த மாநாட்டின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-6)



## தேர்தலில் நிஷாந்தவின் மனைவி

கொழும்பு, மார்ச் 31

அடுத்த பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் புத்தளம் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு தான் தயார் என்பதை விபத்தில் உயிரிழந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மனைவியான சட்டத்தரணி சாமரி பெரேரா கட்சியின் உயர் மட்டத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

சனத் நிஷாந்தவுக்கு மதிப்பளிக்கும் வகையிலும், கட்சிக்காக அவர் ஆற்றிய சேவைகளுக்கு பிரதி உபகாரமாகவும் சாமரி பெரேராவுக்கு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்க மொட்டுக் கட்சி முன்வந்திருந்தது. இறுதியாக நடைபெற்ற மொட்டுக் கட்சியின் நிறைவேற்றுக்குழு கூட்டத்திலும் இது பற்றி ஆராயப்பட்டுள்ளது.

எனினும், புத்தளம் மாவட்ட மக்களின் ஆணையுடன்தான் நாடாளுமன்றம் வருவேன் என சாமரி பெரேரா கூறியுள்ளார்.

இந்நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியால் நியமிக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று விசாரணைக்குழுவின் உறுப்பினராக சட்டத்தரணி சாமரி பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். (எ-44)

# உடைகிறது பெரமுன தடுக்கப் பிரயத்தனம்!

**கொழும்பு, மார்ச் 31**

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி மேலும் பிளவுபடுவதைத் தடுப்பதற்காக அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சமரசப் பேச்சுகளில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது.**

ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு என்ற விடயத்தால் மொட்டுக் கட்சிக்குள் ஏற்கனவே கருத்து மோதல் ஏற்பட்டிருந்த நிலையில், தேசிய அமைப்பாளர் பதவிக்கு நாமல் நியமிக்கப்பட்டுள்ளதால் அது மேலும் உக்கிரமடைந்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கே மொட்டுக் கட்சி ஆதரவு வழங்க வேண்டும் எனவும், அவ்வாறு இல்லாவிட்டால் கட்சியில் இருந்து விலகி அவரை ஆதரிக்க நேரிடும் எனவும் மொட்டுக் கட்சியின் அமைச்சர்களும், இராஜாங்க அமைச்சர்களும் பஸில் ராஜபக்சவிடம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

இதனால் ராஜபக்சக்களின் சகாக்கள் சிலர் கடுப்பில் உள்ளனர். சில நாள்களுக்குள் முன்னர் நடைபெற்ற கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தின்போது, ரணிலுக்குச் சார்பான உறுப்பினர்களை நாமலின் விசுவாசிகள் விமர்சித்துள்ளனர் எனவும், ஏற்படவிருந்த கைகலப்புத் தடுக்கப்பட்டுள்ளது எனவும் அறியமுடிகின்றது.

அதேபோல முதலில் பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற பஸிலின் கோரிக்கையுடனும் அமைச்சர்கள் சிலர் உடன்படவில்லை. நிலைமை தொடர்ந்தால் கட்சியின் ஒரு பகுதியினர் ஐக்கிய தேசியக் கட்சி பக்கம் செல்லக்கூடும். இதனால் கட்சி மேலும் பிளவுபட்டு அடுத்த தேர்தலில் வாக்குவங்கியில் அது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் கட்சிக்குள் ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காக சமரச முயற்சியில் விசேட உறுப்பினர்கள் குழுவொன்று ஈடுபட்டுவருகின்றது. (எ-44)

## ஆபத்தான வழியில் செல்கின்றது அரசு!

### சட்டத்தரணி ஏமக சேனாநாயக்க எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 31

பொதுத் தேர்தலை நடத்துவதா அல்லது ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதா என்பது தொடர்பில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காத இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவர்களிடம் அரசாங்கம் ஆலோசிக்கின்றது என்று சட்டத்தரணி ஏமக சேனாநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் ஆணை பெற்றவர்களிடம் இந்த விடயங்கள் ஆலோசிக்கப்படுவதில்லை. இரட்டைப் பிரஜா உரிமை கொண்ட, அரசாங்கத்தில் அங்கம் வகிக்காதவர்களிடமே ஆலோசனை பெறப்படுகின்றது. அரசாங்கத்தின் இவ்வாறான செயற்பாடுகள் ஆபத்தானவை.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல், மாகாணசபைத் தேர்தல் போன்று ஜனாதிபதித் தேர்தலுக்கு திகதி நிர்ணயம் செய்யமுடியாது. அரசமைப்புக்கு அமையவே ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி நிர்ணயிக்கப்படவேண்டும். அரசமைப்பு மீறப்படுவது பாரதூரமான குற்றமாகும் - என்றார். (எ-இ)



கிளிநொச்சியில் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை தொடர்பான ஆய்வு முகாமைத்துவப் பயிற்சிக் கருத்தரங்கு அண்மையில் இடம்பெற்றது. (பு-13-113)



சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் கோயில் மகா கும்பாபிஷேகம் கடந்த புதன்கிழமை கொட்டும் மழைக்கு மத்தியில் அடியவர்கள் சூழ சிறப்புற இடம்பெற்றது. (சு-17)

## மனிதவள முகாமையே அபிவிருத்திக்கு அவசியம்



### சாகல ரத்நாயக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 31

கல்விச் சீர்திருத்தங்களைத் தயார் செய்தாலும், அதற்கேற்ப மனித வளங்களை முகாமைத்துவம் செய்யாவிட்டால், கல்விச் சீர்திருத்தங்கள் பலனளிக்காது. வெற்றிகரமான கல்வி முறை இல்லாத நாட்டில் அபிவிருத்தியை எதிர்பார்க்கமுடியாது.

-இவ்வாறு ஜனாதிபதியின் தேசியப் பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதியின் பணிக் குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு பிரதேசத்துக்கும் தனித்துவமான முறைகளின் மூலம் அந்தப் பிரதேசத்தின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாட்டில் தெனியாயவுக்கும் விசேட இடம் உண்டு. அதற்கேற்ப இப்பகுதி மக்களுக்கும் செலவுக்கு ஏற்ற வருமானம் பெறும் பின்னணியை தயார் செய்து வருகிறோம் - என்றார். (எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசுக் கட்சியின் மகளிர் தினக் கொண்டாட்டம்



யாழ்ப்பாணம், மார்ச் 31
இலங்கை தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதிக்கிளை மகளிர் அணியால் சர்வதேச மகளிர் தினம் நேற்று பி.ப. 3 மணியளவில் வட்டுக்கோட்டை மூன்றாம் வீதியில் அமைந்துள்ள சிறி கணேசா வாசிகசாலை மண்டபத்தில் முன்னாள் தவிசாளரும் வட்டுக்கோட்டை தொகுதிக்கிளை மகளிர் அணி செயற்பாட்டாளருமான நாகரஞ்சினி ஐங்கரன் தலைமையில் இடம்பெற்றது.

60 வயது கடந்த நிலையில் முன்பள்ளி சேவையில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கான கௌரவிப்பும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் இதன்போது இடம்பெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட திருமதி யசோதை சரவணபவன் மற்றும் வட்டுக்கோட்டைத் தொகுதிக்கிளைத் தலைவர் ஈஸ்வரபாதம் சரவணபவன் ஆகியோரால் இவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து பொன்னாலை சந்திர பரத கலாலய மாணவிகளால் சிறிதேவி கண்ணதாசன் நெறியாள்கையுடன் சிறப்பு நடனமும் முன்னெடுக்கப்பட்டது.

வட்டுக்கோட்டைத் தொகுதியில் உள்ள மகளிர் சங்கத்தின் உறுப்பினர்கள், வட்டுக்கோட்டைத் தொகுதியின் தாய்மார் கழகங்களின் உறுப்பினர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (அ-ஒ-125)

## வீதி விபத்துகளில்...

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக கோரப்பட்ட தகவலுக்கு வழங்கியுள்ள பதிலிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. 191 விபத்துச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் அதில் 201 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

| பொலிஸ் பிராந்தியம் | விபத்துகளின் எண்ணிக்கை | மரணமடைந்தோர் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 59 | 62 |
| காங்கேசன்துறை | 25 | 26 |
| மன்னார் | 10 | 10 |
| வவுனியா | 37 | 40 |
| முல்லைத்தீவு | 22 | 25 |
| கிளிநொச்சி | 38 | 38 |

கையிலிருந்து தமிழகத்தில் தஞ்சமடைந்த அகதிகளின் எண்ணிக்கை 297 ஆக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-100)

## மரண வீட்டில்...

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:- தென்னை மரத்தில் தேங்காய் பறிப்பதற்காக ஏறியபோது தவறிவீழ்ந்து காயமடைந்த ஒருவர் 28ஆம் திகதி உயிரிழந்துள்ளார். அவரின் இறுதி நிகழ்வுகள் நேற்று முன்தினம் சுதந்திரபுரம் மத்தியிலுள்ள அவரின் வீட்டில் நடைபெற்றுள்ளது.

இதற்கு யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டையில் இருந்து அவரின் உறவினர்கள் சென்றுள்ளனர். வட்டுக்கோட்டையிலிருந்து வந்த இளைஞர்களுக்கும் சுதந்திரபுரத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கும் சுடலையில் வைத்து வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

அது பின்னர் கைகலப்பாக மாறி சுடலையிலும், அதன் பின்னர் இறந்தவரின் வீட்டில் வைத்தும் இருதரப்பும் கொட்டன்கள், கத்திகள் மூலம் மோதிக்கொண்டனர்.

இதன்போது யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டையில் இருந்து வருகை தந்த உறவினர்களில் மூவருக்கும் சுதந்திரபுரத்தைச் சேர்ந்த இளைஞர்களில் மூவரும் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இவர்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் தீவிர சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (அ-ஒ-19)

## ஜனாதிபதித்...

“2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக பல்வேறு தரப்பினரும் இந்த வழிமுறைகளைக் கையாண்டிருக்கின்றனர். குறிப்பாக பௌத்த - இஸ்லாமிய மோதல்கள் ஏற்படுத்தப்பட்டன. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது இன மதப் பிளவுகளைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு தற்போதைய ஜனாதிபதிக்கும் பாதுகாப்புத் தரப்பினருக்கும் உள்ளது” - என்றார்.

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் அந்த ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்டது என்று குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

## ஆட்சி...

நிலையில் உள்ளவேளையில் இந்த ஆண்டு ஈஸ்டர் பண்டிகையை நாம் கொண்டாடுகிறோம். எமது மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களுக்கும் துன்பங்களுக்கும் நிரந்தரத் தீர்வு காணவேண்டுமாக இருந்தால் எமது ஆட்சி முறைமையில் மாற்றம்தேவை. அதற்காகப் பாடுபடுவது ஒவ்வொரு குடிமகனினதும் பொறுப்பாகும். எமது நேசத்துக்குரிய தாய் நாடு இதுபோன்ற இக்கட்டான ஒரு நிலையை இதற்கு முன் ஒருபோதும் அனுபவித்தது இல்லை.

இந்த நேரத்தில் எமக்கு தெய்வீக இறை தலையீடு தேவையாக உள்ளது. எனவே நாம் இருக்கும் ஆபத்தான சூழ்நிலையில் இருந்து நம்மை விடுவிக்க இந்த ஈஸ்டர் காலத்தில் உயிர்த்த இயேசுவிடம் உருக்கமாக மன்றாடுவோம்.

இந்த ஆண்டு ஈஸ்டர் பண்டிகை, கத்தோலிக்க மற்றும் பிற கிறிஸ்தவ தேவாலயங்களில் வழிபடச் சென்றோர் மற்றும் வேறு இடங்களிலும் நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான குண்டுத் தாக்குதலின் ஐந்து ஆண்டுகள் நிறைவைக் குறிக்கின்றது.

இந்தத் தாக்குதல்களின் பின்னணியில் உள்ளவர்களை விசாரிக்க பல்வேறு குழுக்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டபோதிலும் நாங்கள் இதுவரை உண்மையை அறிய முடியவில்லை - என்றார். (அ-ஒ-56)

## பொது...

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்டக் கொடுப்பனவு ஜூலை மாதமளவில் இலங்கைக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அந்தக் கொடுப்பனவு கிடைத்த கையோடு நிவாரணங்களை வழங்கி ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ள விரும்புகின்றார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

செப்ரெம்பர் 18ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் 18ஆம் திகதிக்கும் இடையில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நிலையில் செப்ரெம்பர் மாதம் 18ஆம் திகதியை அண்மித்த தினத்தில் தேர்தலை நடத்தவே ஜனாதிபதி ரணில் விரும்புவதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட மாட்டார் எனவும், பொதுவேட்பாளராகவே களமிறங்குவார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-5)

## பதவிகளிலிருந்து...

மூவரும் நீக்கப்பட்டுள்ள நிலையில் கூட்டாக ஊடக சந்திப்பொன்றை நடத்தி, அது தொடர்பில் கருத்து வெளியிட்டனர்.

அதில் மேலும் தெரிவித்ததாவது:-

விசேட கூட்டம் என்றே கூறப்பட்டது. நிறைவேற்றுக்குழுவோ, மத்தியக்குழுவோ கூட்டப்படவில்லை. நாம் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டமை ஏற்புடையது அல்ல. கருத்துகளை முன்வைப்பதற்கு எமக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. [illegible] சில்வா தொடர்பிலும் இவ்வாறு தீர்மானமொன்று எடுக்கப்பட்டது. ஆனால் அவர் நீதிமன்றம் சென்று நீதியைப் பெற்றார். நாமும் நீதிமன்றத்தை நாடுவோம். மைத்திரிபால சிறிசேன அண்மைய நாட்களில் மனக்கவலையில் இருப்பது புரிகின்றது. நாம் கட்சியில்தான் இருக்கின்றோம். உறுப்புரிமை நீக்கப்படவில்லை. சுதந்திரக்கட்சி என்பது தனி நபருக்குரிய சொத்து அல்ல - என்றனர். (அ-ஒ-44)

## தமிழகத்தில்...

மன்னார், திருக்கேதீச்சரம் பகுதியைச் சேர்ந்த முருகானந்தம் அவரது மனைவி ரீட்டா மேரி மற்றும் அவர்களது இரண்டு குழந்தைகள் என ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் இலங்கையிலிருந்து படகு மூலம் புறப்பட்டு நேற்றுச் சனிக்கிழமை காலை தனுஷ்கோடியை அடுத்துள்ள மணல் திடைப் பகுதியில் இறக்கிவிடப்பட்ட நிலையில் இருந்துள்ளனர். இது தொடர்பில் கிடைத்த தகவலை அடுத்து இந்தியக் கடலோரக் காவல் படையினர் ரோந்துக் கப்பலில் மீட்டு தனுஷ்கோடி அரிச்சல்முனை அழைத்து வந்து இராமேஸ்வரம் கடற்கரையோரப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

நால்வரையும் விசாரணைக்காக மண்டபம் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்ற மத்திய, மாநில உளவுத்துறை அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைத்துள்ளனர்.

முதற்கட்ட விசாரணையில், இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக தினசரி ஒருவேளை மட்டுமே சாப்பிட முடிவதாகவும், இலங்கையில் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் பயன்பாடு அதிகரித்துள்ளதால் குழந்தைகளை வைத்துக்கொண்டு பாதுகாப்பாக வாழ முடியாததால் தமிழகத்துக்கு அகதிகளாக வந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

[illegible] நெருக்கடி காரணமாக இலங்

காணி விற்பனைக்கு உண்டு
பலாலி வீதிக்கும் உரும்பிராய்க்கும் இடையில் அமைந்துள்ள பலாலி வீதியை முகப்பாகக் கொண்ட இரண்டு கடை அமைப்பதற்கும், ஒரு வீடு அமைப்பதற்குமான காணி விற்பனைக்கு உண்டு.
➤ 40 அடி அகலம் 165 அடி நீளம்
➤ 50 அடி அகலம் 165 அடி நீளம் உடைய காணிகள் விற்பனைக்கு உண்டு.
077 603 3259
(CS/28370) J-1

காணி விற்பனைக்கு
மருதனார்மடம் உரும்பிராய் வீதி - 1 3/4 பரப்பு, 2 பரப்பு.
திருநெல்வேலி - நாவலடி வீதி பரப்பு 1 குளி 5.22
077 104 8865

வீடு தேவை
சுன்னாகத்துக்கும் K.K.S க்கும் இடையில் 04 பேர் தங்கக்கூடிய வீடு தேவை. K.K.S Road இல் இருந்து 1Km க்குள் இருத்தல் அவசியம். Main Road இல் இருந்தால் நல்லது.
077 744 7909,077 675 3592

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருணாவின் ஆதரவு ரணிலுக்கு

கொழும்பு, மார்ச் 31 ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதற்கு விநாயகமூர்த்தி முரளிதரன் தலைமையிலான தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி தீர்மானித்துள்ளது. நெருக்கடியான சூழ்நிலைகளுக்கு மத்தியில் நாட்டை கட்டியெழுப்புவதில் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவின் பங்கு அளப்பரியது. ஜனாதிபதி தலைமையில் நாடு முன்னேற்றத்தைக் கண்டுள்ளது என்றும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

(எ-இ)





### வீடு வாடகைக்கு உண்டு

வேலணை வங்களாவடி மத்திய கல்லூரிக்கு அருகில் வீடு வாடகைக்கு உண்டு.

075 255 7928, 076 004 7928

### பணிப்பெண் தேவை

கொழும்பில் தங்கி இருந்து வீட்டு வேலை செய்வதற்கு வீட்டுப் பணிப்பெண் தேவை.

077 386 6250

### வீடு வாடகைக்கு

நல்லூர் பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

077 002 2251

### வீடு வாடகைக்கு

கொக்குவில் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள வீட்டின் மேல்மாடி சகல வசதிகளுடன் கொண்ட அறைகள் வாடகைக்கு விடப்படும். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் குடும்பத்தினருக்கும் தங்குவதற்கு உகந்தது.

076 072 6058

### முச்சக்கர வாகன உதிரிப்பாக விற்பனை நிலையத்தில் வேலைக்கு ஆட்கள் தேவை

முச்சக்கர வண்டி உதிரிப்பாக கடை ஒன்றிற்கு வேலைக்கு ஆட்கள் தேவை. உதிரிப்பாகம் தொடர்பான அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

077 890 0142

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் திருநெல்வேலி அம்மாச்சி உணவகத்திற்கு முன்பாக 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தரகர்கள் தொடர்பு கொள்ளவேண்டாம்.

தொடர்பு: 076 206 1703

### நடத்துநர் தேவை

யாழ் - கொழும்பு பயணிகள் சேவையில் ஈடுபடும் PPT BUS இற்கு நடத்துநர் தேவை.

077 386 6250

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ் நகரில் இருந்து 5Km உட்பட்ட பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு:- 077 120 8481

### வேலையாட்கள் தேவை

காங்கேசன்துறையில் அமைந்துள்ள பண்ணை ஒன்றிற்கு தங்கி நின்று வேலை செய்வதற்கு வேலையாட்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- 077 747 4498

### வீடு வாடகைக்கு

சித்தன்கேணியில் பெருந்துப் பாதை முகப்புடன் இரண்டு படுக்கை அறை, சமையல் அறை. Store Room இணைந்த Tiled குளியலறை மற்றும் பெரிய Garage உடன் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 336 4792

### காணி விற்பனைக்கு

கொக்குவில் குளப்பிட்டி - ஆனைக்கோட்டை வீதியில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் கேணியடி லேனில் சிறு வீட்டுடன் கூடிய 3 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நேரடியாக தொடர்பு கொள்ளவும். விலை விபரம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு: - 070 193 8372 (What'sapp) 077 443 4501

### SPOKEN ENGLISH WITH GRAMMAR

யாழ் இந்துக்கல்லூரி வீதியில் பேச்சுப் பயிற்சி வகுப்புகள்.

ஒவ்வொரு மாணவருக்கும் அவரது அடிப்படையில் இருந்து தெளிவாக கற்பிக்கப்படும்.

தனி, குழு வகுப்பு

ஆண்டு 7 to GCE OL , AL, பட்டதாரிகள் - தொழில்புரிவோர்.

K.Ganesh B.A 077 766 8725

### காணி விற்பனைக்கு

நொதேண் வைத்தியசாலைக்கு முன்பாக செல்லும் 12 அடி பாதை ஒழுங்கையில் பலாலி வீதியிலிருந்து இரண்டாம் காணியாக அமைந்த 1 3/4 பரப்பு விற்பனைக்குள்ளது. விலை மொத்தமாக 41 மில்லியன் (4 கோடி 10 இலட்சம்).

தொடர்பு :- 077 803 8739

### இப்பொழுது யாழ்ப்பாணத்தில் SOLA CHEMICAL COMPANY (PVT) Ltd

| | | | |
|---|---|---|---|
| கல்சியம் நீக்கி | 4 L | ~~2200~~ | 1400 |
| சலவைத் திரவம் | 4 L | ~~3200~~ | 1600 |
| ஹான்ட் வோஷ் | 4 L | ~~2800~~ | 1600 |
| டிஷ் வோஷ் | 4 L | ~~1900~~ | 950 |
| மாபின் கிளீனர் | 4 L | ~~2600~~ | 1400 |
| டொய்லட் கிளீனர் | 4 L | ~~2600~~ | 1400 |
| வோஷிங் பவுடர் | 3 Kg | ~~1185~~ | 900 |

விசேட விலைக்கழிவு

No.576/ 2C, Siyambalape Road, Heiyanthudwa, Mokola, Reg No. PV/ 00240433

288, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 021 222 0866 / 0777 495 494

### வேலை வாய்ப்பு

யாழ்மாவட்டத்தில் அமைந்துள்ள பிரபல நர்சிங் ஹோம் நிறுவனத்திற்கு வருகை தரும் பெண் தாதியர் (Visiting nurse - Female) வேலைக்கு தேவைப்படுகின்றனர்.

- கல்வி தகுதி - நர்சிங் டிப்ளோமா (Nursing Diploma)
- முன் அனுபவம் - 2 - 3 வருடம்
- வயது வரம்பு - 30 முதல் 50 வரை
- கட்டாயம் இருசக்கர வண்டி இருக்க வேண்டும்.
- யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

தொடர்பு:- 077 700 6803

### உடனடி வேலைவாய்ப்பு

யாழ் நகரில் இயங்கிவரும் மோட்டார்சைக்கிள் உதிரிப்பாகங்களை விநியோகம் செய்யும் நிறுவனத்திற்கு பின்வரும் பதவி நிலைகளுக்கு வேலையாட்கள் தேவை.

- கணக்காளர்
- கணக்கு உதவியாளர்
- விற்பனையாளர்
- விற்பனை உதவியாளர்

மேற்படி பதவி நிலைகளுக்கு மோட்டார் சைக்கிள் உதிரிப்பாக விற்பனைத்துறையில் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:- 077 717 8025

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு அண்மையாக பலாலி வீதியிலிருந்து 150 m தூரத்தில் வீட்டுடன் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

* மொத்தமாகவும் அல்லது பிரித்தும் கொடுக்கப்படும்
* விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - 450 m
நொதேண் வைத்தியசாலை - 350 m
நல்லூர் கோயில் - 1200 m

தொடர்பு: உரிமையாளர்

075 776 7777, 076 625 5277

### மணமகள் தேவை

யாழ் இந்து (V) பூரட்டாதி நட்சத்திரத்தில் 1989 இல் பிறந்த, 4 இல் சூரியன், செவ்வாய், புதன் உள்ள சொந்தமாக தொழில்புரியும் மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை.

தொடர்பு:- 077 524 3135

### சாவகச்சேரியில் காணி விற்பனைக்கு உண்டு

சாவகச்சேரி நகர் கண்டி வீதியில் 190, ஏற்றத்தடியில் 3 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

076 615 6958, 076 430 1811

## தென்னிந்திய தலயாத்திரை

30 ஆலயங்கள் தரிசனம் செய்ய முடியும் — 12 நாட்கள்

### கட்டணத்தில் உள்ளடங்குபவை

- இந்திய வீசா
- விமானபயணச்சீட்டு
- குளிரூட்டப்பட்ட வாகனம்
- மூன்று வேளை உயர்தர சைவ உணவு
- தேநீர் / பழச்சாறு
- குளிரூட்டப்பட்ட தங்குமிடம்
- நுழைவுக்கட்டணம் (சிறப்புத்தரிசனம்)
- சுற்றுலா மேலாளர்
- நினைவுப் பரிசில்

தொடர்புகளுக்கு: 077 711 4828

BOHAR TRAVELS
Bohar International (Pvt) Ltd
510, பருத்தித்துறை வீதி, நல்லூர்

(cs 28365) (N-1)

### மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் (V) 1991 ஆம் ஆண்டு பிறந்த திருவோணம் முதலாம் பாதம், 7 இல் செவ்வாய் கிரகபாவம் 71. சொந்தமாக வியாபார நிறுவனம் வைத்திருக்கும் மணமகனுக்கு தகுந்த உள்நாட்டு பட்டதாரி மணமகள் தேவை. 7,8 செவ்வாய் மட்டும் பொருந்தும். (தரகர் தேவையில்லை)

076 058 1753, 077 978 9484

### மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் (V) 1989 ஆம் ஆண்டு பிறந்த விசாகம் 1 ஆம் பாதம், 30½ பாவம், ராசி - துலாம். BBA, MBA முடித்துள்ளார். தொழில் தற்போது D/O, கணக்காய்வாளர். மணமகனுக்கு தகுந்த உள்நாட்டு பட்டதாரி மணமகள் தேவை. தரகர் தேவையில்லை

077 503 5856, 701 883 6942


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 — news@uthayan.com — விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.03. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : ... 2055 பங்குனி 18 ஞாயிற்றுக்கிழமை (31.03.2024) சிகரம் : 194

"வாழ்ந்து கொண்டிருப்பவனை
வாழ்த்த என்ன இருக்கிறது
சோர்ந்து போகாமல்
இருக்கட்டும்
அவன் சோகங்களும்
கோபங்களும்"

- பிரான்சிஸ் கிருபா




# தமிழ்ப் பொது வேட்பாளர்;

# யாரால் யாருக்கு யாருக்காக ?

○ நிலாந்தன்

சில மாதங்களுக்கு முன்பு வடமராட்சி கட்டைவேலி கிராமத்தில் ஒரு மக்கள் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. சமகால நிலைமைகள் தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டும் நோக்கிலான அந்தச்சந்திப்பின் போது, வளவாளர் அங்கு வந்திருந்த மக்களை நோக்கி பல்வேறு கேள்விகளையும் கேட்டார். குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலில் அவர்கள் யாருக்கு வாக்களிக்க விரும்புகிறார்கள்? ஏன் வாக்களிக்க விரும்புகிறார்கள்? என்றும் கேட்டார். கேள்விகளின் போக்கில் அவர் ஒரு கட்டத்தில் கேட்டார், தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தினால் அவருக்கு நீங்கள் வாக்களிப்பீர்களா? என்று. அங்கு கூடியிருந்த பொதுமக்கள் ஏறக்குறைய ஒரே குரலில் ஆம் என்று பதிலளித்தார்கள். அதில் யாரோ ஒரு பெண் ரகசியமான குரலில் சொன்னார் "அந்தப் பொது வேட்பாளர் தமிழீழம் கேட்டால் சந்தோஷமாக வாக்களிப்போம்" என்று.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தவேண்டும் என்ற கோரிக்கையை, சில மாதங்களுக்கு முன்னரே ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் முன் வைத்தார். அதன் பின் அவர் அங்கம் வகிக்கும் குத்துவிளக்குக் கூட்டணி அதை ஒரு தீர்மானமாக நிறைவேற்றியது. அதன்பின் விக்னேஸ்வரன் அவ்வாறு ஒரு பொது வேட்பாளராக நிற்பதற்குத் தான் தயார் என்று அறிவித்திருந்தார்.




இந்த விடயத்தில் தமிழரசுக் கட்சி அதன் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை இன்று வரை வெளிப்படுத்தவில்லை. அவ்வாறு ஒருமித்த முடிவை எடுக்கமுடியாதபடி அந்தக்கட்சி நீதிமன்றம் ஏறிக்கொண்டிருக்கிறது. எனினும், தமிழரசுக் கட்சிக்குள் தேர்தல் நடப்பதற்கு முன்பு, சாணக்கியன் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்திருந்தார். அதேசமயம் அண்மையில் யாழிலுள்ள காட்சி ஊடகமொன்று நடத்திய கருத்தரங்கில் பேசிய சிறீதரன் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாகக் கருத்துரைத்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வழமை போல தேர்தலைப் பகிஷ்கரிக்கப் போகின்றது.

இதனிடையே, புலம்பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர் ஒருவருடைய தூதுவர் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட புலம்பெயர்ந்த தமிழர் ஒருவர், சில மாதங்களுக்கு முன், தமிழ்க் கட்சிகள் சிலவற்றோடு உரையாடியிருக்கிறார். குறிப்பிட்ட முதலீட்டாளர் தென்னிலங்கையில் உள்ள இரண்டு கட்சிப் பதிவுகளை விலைக்கு வாங்கி வைத்திருப்பதாகவும், அதில் ஒரு கட்சியின் பதிவின் கீழ் தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைத்து ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்த முயற்சிப்பதாகவும் கூறப்பட்டது. அந்தத்தமிழ்ப் பொது வேட்பாளர், தமிழ் வாக்குகளை ஒன்று திரட்டி ரணில் விக்கிரமசிங்கவை நோக்கித் திருப்புவார் என்றும் கூறப்பட்டுள்ளது. அதாவது ரணிலை வெல்ல வைப்பதற்கே அந்த முயற்சி என்று விளக்கம் தரப்பட்டுள்ளது. பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் அந்தக் கோரிக்கைக்கு இணங்கவில்லை என்றும் தெரிகிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற தெரிவை தமிழ் மக்கள் பேரவை கையில் எடுத்தது. அது வெற்றி பெறவில்லை. இப்பொழுது குத்து விளக்குக் கூட்டணி, புலம்பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர் போன்றன அதைக் கையில் எடுத்திருக்கின்றனவா?

இந்த விடயத்தில் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ் மக்கள் பேரவை ஏன் வெற்றிபெறவில்லை என்ற கேள்விக்கு விடை முக்கியம்.

அன்றைக்கு அந்த முயற்சிக்கு சம்பந்தர் ஆதரவாக இருக்கவில்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தலைப் புறக்கணிக்கும் முடிவை எடுத்தது. ஆனால் ஏனைய கட்சிகள் தயக்கத்தோடு தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்க முன்வந்தன. அவ்வாறு ஆதரித்த கட்சிகளை ஒன்று திரட்டி அதை ஒரு அரசியல் செய்முறையாக பரிசோதிப்பதற்கு பேரவையால் முடியவில்லை. அதற்குத் தேவையான பலமும் கட்டமைப்பும் தமிழ் மக்கள் பேரவையிடம் இருக்கவில்லை. இப்பொழுதும் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்தத் தேவையான பலம், அது பற்றி உரையாடுபவர்களிடம் உண்டா?

இது ஏறக்குறைய கட்சிகளை ஒன்று திரட்டும் முயற்சியின் மறு வடிவம்தான். அதை இன்னும் தெளிவாகச் சொன்னால், ஜனாதிபதித் தேர்தல் என்ற ஓர் அரசியல் நிகழ்வை முன்வைத்து தமிழ் ஐக்கியத்தைக் கட்டி எழுப்புவது; தமிழ் மக்களை ஒரு தேசமாகக் கட்டியெழுப்புவது தான். ஆனால் கடந்த 15 ஆண்டுகளாக அதைச் செய்யத்தான் தமிழ் பரப்பில் ஆட்கள் இல்லையே? தமிழ்க் கட்சிகளை ஒன்றாக்குவதற்கு ஏதாவது ஒரு பலம் இருக்க வேண்டும். கட்சிகளைக் கூப்பிட்டுக் கருத்தரங்கை வைக்கலாம். ஆனால் கட்சிகளை ஒன்று திரட்டி இதைச் செய்யுங்கள் என்று நெறிப்படுத்த ஒரு பலமான அரசியல் கட்டமைப்பு வேண்டும். அது தமிழ் மக்களிடம் உண்டா? இல்லையென்றால் தமிழ் ஐக்கியத்தைப் போலவே தமிழ்ப் பொது வேட்பாளர் தெரிவும் நெருக்கடிக்கு உள்ளாகும்.

உள்ளதில் பெரிய கட்சியாகிய தமிழரசுக் கட்சி இந்த விடயத்தில் ஆதரவளிக்காவிட்டால் அது வெற்றி பெறாது என்ற கருத்து குத்துவிளக்கில் உள்ள சில கட்சிக்காரர்களிடம் உண்டு. இதில் தன்னம்பிக்கை குறைவும் தாழ்வுச் சிக்கலும் உண்டு என்பதை முதலில் ஒப்புக்கொள்ளவேண்டும். தன் சொந்தப் பலத்தில்; சொந்த உழைப்பில்; தான் சரியென்று கருதும் ஒன்றை வெற்றிபெறச் செய்வதற்கான திடசித்தம் குத்துவிளக்குக் கூட்டுக்குள் எத்தனை கட்சிகளிடம் உண்டு?

தமிழரசுக் கட்சி இந்த விடயத்தில் முடிவெடுக்க முடியாதபடி இரண்டாக நிற்கின்றது. அது நீதிமன்றத்தில் இருந்து வீட்டுக்குத் திரும்பும் வரையிலும் இந்த நிலைமை தொடரும். இவ்வாறு அந்தக்கட்சி இரண்டாகி நிற்பது தென்னிலங்கை வேட்பாளர்களுக்குச் சாதகமானது.

ஒரு பொதுத் தமிழ் வேட்பாளர் என்ற விடயத்தை தமிழ் மக்கள் உருப்படியாகச் செய்து முடிப்பார்கள் என்று தென்னிலங்கையில் உள்ள எந்த ஒரு வேட்பாளரும் நம்பவில்லை. கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ் மக்கள் பேரவையின் சுயாதீனக் குழுவோடு உரையாட சஜித் பிரேமதாஸ முயற்சித்தார்.

06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ கே.வி.தவராசா



# யாழ். பொலிஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜயவர்த்தன கொலை




2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி. யாழ்ப்பாணம், இணுவில் பகுதியில் உள்ள சலூன் ஒன்றுக்கு இரு சிப்பாய்கள் முடியலங்காரம் செய்யச் சென்றிருந்தனர். அப்போது ஒரு சிப்பாய் அந்தச் சலூனுக்குள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். இதனால் அந்த முடியலங்கார நிலையத்தில் இருந்த இரண்டு இளைஞர்கள் காயமடைந்தனர். அவர்கள் உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். ஆயினும் காயமடைந்தவர்களில் ஒருவரான நாவிதன் என்ற இளைஞர் மருத்துவமனையில் உயிரிழந்தார். இதனால் யாழ்ப்பாணத்தில் பெரும் பதற்ற நிலை உருவானது.

குறிப்பாக இணுவில் பகுதியில் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்தநிலையில் அங்கு ஏற்பட்ட பதற்றத்தை தணிக்கும் வகையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்துக்குச் சென்றார் யாழ்ப்பாணப் பொலிஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேவர்த்தன . ஆனால் அங்கு இளைஞர்கள் சிலரால் அவர் கடத்தப்பட்டு, அடித்துக் கொல்லப்பட்டார். இந்தக்கொலையை விடுதலைப்புலிகளே செய்தனர் என்று இலங்கை அரசாங்கம் நம்பியது. விடுதலைப்புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் சமாதானப் புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த காலம் என்பதால், வழக்கம் போல இந்தப் பிரச்சினையை இராணுவரீதியில் சந்திக்க அரசாங்கத்தால் முடியவில்லை.

### கோபி கைது

யாழ்ப்பாணப் பொலிஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேவர்த்தனவைக் கொன்றவர் குறிப்பிட்ட ஓரிடத்தில் மறைந்திருக்கிறார் என ஓர் இரகசியத் தகவல் அரசாங்கத்துக்கு கிடைத்தது. இதனடிப்படையில், குறிப்பிட்ட இடத்தினை பொலிஸாரும் இராணுவத்தினரும் சுற்றிவளைத்தனர். ஆனால் திடீரென அங்கு மறைந்திருந்தவர்களால் பொலிஸார் மீதும், படையினர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தினால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜண்ட் திலகரத்ன என்பவருக்கும், குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒரு பொலிஸ் உத்தியோகத்தருக்கும் கடும் காயம் ஏற்பட்டது. இந்தத் தாக்குதலால் படைத்தரப்பும், பொலிஸாரும் அங்கிருந்து பின்வாங்கினர். காயமடைந்தவர்கள் யாழ்ப்பாணம் மருத்துவமனையில் முதலில் சேர்க்கப்பட்டனர். ஆனால் காயமடைந்தவர்களில் ஒருவரான சார்ஜண்ட் திலகரத்னவுக்கு நெஞ்சிலும் துப்பாக்கிச் சூடு பட்டிருந்ததால், அவரது உடல்நிலை மோசமடைந்தது. உடனடியாக அவர் விமானம் மூலம் கொழும்புக்கு சிகிச்சைக்காக அனுப்பப்பட்டார்.

இந்தநிலையில், இராணுவத்தினராலும் பொலிஸாரினாலும் தொடர்ந்து நடத்தப்பட்ட கூட்டு நடவடிக்கையில் யாழ்ப்பாணப் பொலிஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேவர்த்தனவின் கொலையில் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்தவரான கோபி என அழைக்கப்படும் கதிரமலை வைதீகன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அருகில் 2005.08.17ஆம் திகதி மு.ப. 10.05 மணியளிவில் கைது செய்யப்பட்டார்.

### விசாரணைகள் கொழும்பில்

கோபி என அழைக்கப்படும் கதிரமலை வைதீகனை கைதுசெய்த பின்னர் பொலிஸ் அத்தியட்சகர் சார்ல்ஸ் விஜேவர்த்தன கொலை செய்யப்பட்ட யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் பலமான நிலையில் காணப்பட்டதால், அங்கு புலிகளின் கடும் அச்சுறுத்தல் காரணமாக பாதுகாப்பாக விசாரணைகளை யாழ்ப்பாணத்தில் நடத்த முடியாதுள்ளது என்றும், விசாரணைகளை கொழும்புக்கு மாற்றும்படியும் சட்டமா அதிபருக்கு, குற்றப்புலன் விசாரணை அதிகாரிகள் கோரிக்கை விடுத்தனர். அந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டது. தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபரான கோபியை கொழும்புக்கு விமானத்தில் அழைத்துச் சென்று, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் விசாரணைகளை நடத்தினர். அந்த விசாரணைகளின் முதல் அறிக்கையும் மேலதிக விசாரணை அறிக்கைகளும் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன.

> இராணுவத்தினராலும் பொலிஸாரினாலும் தொடர்ந்து நடத்தப்பட்ட கூட்டு நடவடிக்கையில் யாழ்ப்பாண பொலிஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேவர்த்தனவின் கொலையில் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்தவரான கோபி என அழைக்கப்படும் கதிரமலை வைதீகன், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு அருகில் 2005.08.17ஆம் திகதி மு.ப. 10.05 மணியளிவில் கைது செய்யப்பட்டார்.



### அடையாள அணிவகுப்பு

கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் நடத்தப்பட்ட ஆள் அடையாள அணிவகுப்பின் போது பொலிஸ் அதிகாரிகள் அடங்கலாக எந்தவொரு சாட்சியினாலும் சந்தேகநபரான கோபியை அடையாளம் காணமுடியவில்லை. அடையாள அணிவகுப்பின் பின்னர் கோபியை நீதிமன்றில் பொலிஸார் ஆஜராக்கிய பொழுது . 'சந்தேக நபரான கோபி அடையாள அணிவகுப்பில் அடையாளம் காணப்படாமையாலும் விசாரணையில் எந்தவிதமான குற்றங்களையும் புரிந்ததாக சான்றுகள் எதுவும் முன்வைக்கப்படாமையாலும் சந்தேக நபரான கதிரமலை வைதீகனை விடுதலை செய்யவேண்டும்' என்ற எனது வாதத்தை முன்வைத்தேன்.

கொழும்பு பிரதான நீதிவான் செல்வி சரோஜினி குசலா வீரவர்த்தன புலனாய்வுப் பிரிவு பொலிஸ் அதிகாரியிடம் இந்த வழக்கின் விசாரணை அறிக்கைகள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருப்பதனால் சந்தேகநபரான கதிரமலை வைதீகனை விடுதலை செய்ய நீதிமன்றுக்கு நியாயாதிக்கம் இன்மையால் சட்டமா அதிபரின் நிலைப்பாட்டை 2005 ஒக்ரோபர் 26 ஆம் திகதி நீதிமன்றுக்கு அறிவிக்கும்படி கட்டளையிட்டார்.

### விடுதலை

அடையாள அணிவகுப்பின் பின்னர் பாதுகாப்புக் காரணங்களுக்காக இவ்வழக்கு வெலிக்கடைச் சிறைச்சாலையில் அமைந்துள்ள விசேட நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அந்தவேளையில் சட்டமா அதிபரின் சார்பில் நீதிமன்றில் ஆஜராகிய அரச சட்டத்தரணி, சந்தேக நபருக்கு எதிராக குற்றப்பத்திரம் சமர்ப்பிப்பதற்கு எவ்வித சான்றுகளும் இல்லையென நீதிமன்றுக்குத் தெரிவித்ததையடுத்து சந்தேகநபரான கதிரமலை வைதீகனை பிரதான நீதவான் விடுதலை செய்தார்.

கோபி எனப்படும் கதிரமலை வைதீகனை நீதிமன்றம் விடுதலை செய்த பின்னர் நீதிமன்றில் இரண்டு வேண்டுகோள்களை முன்வைத்தேன். ஆனால் எனது இரண்டு வேண்டுகோள்களையும் நிறைவேற்ற நீதிமன்றுக்கு அதிகாரம் இல்லையெனனக் கூறி, அவை பிரதான நீதவான் நீதிமன்ற நீதிபதியால் நிராகரிக்கப்பட்டன. விடுதலையின் பின்னர் தனது உயிருக்குப் பாதுகாப்பு வழங்குமாறு கதிரமலை வைதீகன் என்னிடமும் என் துணைவியாரிடமும் மன்றாட்டமாக கேட்டுக் கொண்டிருந்தார். நான் உடனடியாகவே நீதிமன்றத்திடம் கோபி கைது செய்யப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு விமானம்மூலம் கொண்டுவரப்பட்டார் என நீதிமன்றத்தில் எடுத்துரைத்ததுடன் கோபியை யாழப்பாணத்துக்குத் திருப்பி அனுப்புவதிலும் அதே வழிமுறைப் பின்பற்றுமாறு பொலிஸாருக்கு உத்தரவிடுமாறு நான் நீதிமன்றத்திடம் வேண்டிக் கொண்டேன். ஆனால் பிரதான நீதிபதி சந்தேகநபரை விடுதலை செய்வதற்குத் தான் தனக்கு அதிகாரம் உண்டே தவிர, அதன் பின்னர் விடுதலையான கைதியான கதிரமலை வைதீகனுக்கு பாதுகாப்பு வழங்குதற்கு இந்த நீதிமன்றுக்கு அதிகாரமில்லை என்று கூறி எனது வேண்டுகோளை நிராகரித்தார். நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்ட கதிரமலை வைதீகனை பத்திரமாக யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிச் செல்வதற்கான ஏற்பாடுகளை நாங்கள் மேற்கொண்டோம். இதனையடுத்து கோபி என்றும் வீரபாண்டியன் என்றும் அழைக்கப்படும் கதிரமலை வைதீகன் 2006 ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு பத்திரமாகத் திரும்பிச் சென்றார்.

(அடுத்த வழக்கு அடுத்த வாரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூத்துக்கலைக்கு உயிர்கொடுக்கும் கலைஞன்



அண்ணாவியார் செபமாலை சந்தியோகு குரூஸுடன் ஒரு சந்திப்பு

வடமாகாணத்தின் மன்னார் மாவட்டத்தில் முசலிப் பிரதேசசபைக்குட்பட்ட முத்தரிப்புத்துறை எனும் கிராமத்தில், நாட்டுக்கூத்து நடிகர், கூத்துப்பிரதி எழுத்தாளர், ஒப்பனையாளர், அண்ணாவியார் என்று கடந்த 35 வருடங்களாகப் பல்துறை ஆளுமை கொண்ட **செபமாலை சந்தியோகு குருஸ் (மரியதாஸ்)** வழங்கிய நேர்காணல் இது.



நேர்கண்டவர்: யோகேஸ்வரன் ஜோவர்ணன்
(ஊடகக்கற்கைகள் துறை, யாழ். பல்கலைக்கழகம்)

**கே: கூத்துக் கலையின் மீது உங்களுக்கு எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது?**

ப: எனது தந்தையாரிடம் அச்சுப் பதித்த புத்தகங்களில் ஒப்பாரி, அம்மானை, ஞானசௌந்தரி, மரியதாசன் நாட்டுக்கூத்து , தேவசகாயம் பிள்ளை நாட்டுக் கூத்து என பல கூத்துகள் இருந்தன. என் தந்தை செபமாலை குரூஸ் (புலவர் ராசையா) நடிகர் மற்றும் அண்ணாவியாராவார். தந்தை மூலம் நடிப்பு எனக்கு ஊட்டப்பட்டது. அதுமட்டுமின்றி நான் முதன் முதலாக நடித்து முடித்துவிட்டு மேடையின் கீழ் இறங்கி வந்தபோது பல இரசிகர்கள், கைகள் குலுக்கி, கட்டியணைத்து என்னைப் பாராட்டி வாழ்த்தினர் . இதுவே என்னை மேலும் கூத்துத் துறையில் பயணிக்க ஆர்வமூட்டியது.

**கே: எவ்வாறான கூத்துகளை இது வரை பயிற்றுவித்துள்ளீர் கள்?**

ப: கூத்துகளை வரலாற்றுக் கூத்துகள், கற்பனைக் கூத்துகள் என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். வரலாற்றுக் கூத்துகள் உண்மைக் கதையை அடிப்படையாக கொண்டு அமையும். அந்த வகையில் திருக்குடும்ப ஸ்தாபகர் பீற்றர் பியன்வெனுவின் பிரான்சியப் புரட்சியைக் கூறும் 'புரட்சிக்குள் ஒரு பாதை' நாட்டுக்கூத்து, கிறிஸ்து பிறப்பை மையப்படுத்திய 'ஒளிகண்ட ராஜன்' மற்றும் 'விடிவெள்ளி காட்டிய விடியல்' நாட்டுக்கூத்து, திருமுழுக்கு யோவானுடைய - 'செங்குருதி நாட்டுக்கூத்து', மற்றும் இலங்கையின் அப்போஸ்தலர் என அழைக்கப்படும் யோசேவாஸ் அடிகளாரின் வரலாற்றைக் கூறும் 'மறை வளர்த்த மாவீரன்' நாட்டுக் கூத்து போன்றவற்றை நானே எழுதி, பழக்கியுள்ளேன். அதில் 'மறை வளர்த்த மாவீரன்' நாட்டுக் கூத்து பெரிய வெற்றியை ஈட்டியதுடன், பல விருதுகளையும் பெற்றுக் கொடுத்தது.

இதற்குப் பின்னரே எமது கிராமத்துக் கலைஞர்களை இணைத்து, வெற்றி ஈட்டிய கூத்தின் கதாநாயகனான புனித யோசேவ் வாஸை மையப்படுத்தி 'புனித யோசேவ் வாஸ் கலாமன்றம்' ஒன்றை உருவாக்கினேன்.

இம்மன்றத்தினூடாகவே இவ்வாறு பல வரலாற்றுக் கூத்துகளும் மற்றும் வேதாகம கதையை மையமாகக் கொண்ட - 'திருந்திய மைந்தன்' நாட்டுக்கூத்து, முத்தரிப்புத்துறைக் கிராம சூழலை கற்பனையாகக் கொண்ட 'முத்துராஜன்' என்ற நாட்டுக்கூத்து என பல கற்பனைக் கூத்துகளையும் எழுதி, நெறியாள்கை செய்துள்ளேன். தென்பாங்கு, வடபாங்கு என இரண்டு கூத்துமோடிகள் இருந்தாலும் எங்கள் பகுதியில் தென்பாங்குக் கூத்துமோடியே அதிகம் பயில்வில் உள்ளது.

**கே: தென்பாங்குக் கூத்துகளின் நிகழ்த்து முறைகள் எவ்வாறு இருக்கும்?**

ப: கூத்துகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு முறையில் ஆற்றுகை செய்யப்படும். அதன்படி மன்னாரில் 'மாதோட்ட மரபின்படி' இராகங்கள் மற்றும் ஆற்றுகை இடம்பெறும். கூத்தானது வல்ல சிலுவை பாடப்படுவதுடன் ஆரம்பமாகும். சபையைப் பார்த்து ஆடும் போது நடிகரின் பின்பக்கத்தை காட்ட மாட்டோம். சில சமயங்களில் வடபாங்கு கூத்துகளின் பாடல்களை தென்பாங்கு கூத்துகளின் இராகத்தில் பாடுவோம்.

**கே: கூத்துக்கான ஒப்பனைப் பொருட்களை எவ்வாறு பெற்றுக் கொள்வீர்கள்?**

ப: சின்ன வயதிலிருந்து கூத்துகளில் நடிப்பதினால், என்னுடைய அனுபவத்தின் மூலம் கற்றுக்கொண்டு, ஒவ்வொரு கூத்துகளுக்கும் நானே வித்தியாசமான முறையில் ஒப்பனைகளை வடிவமைப்பேன்.

உதாரணத்துக்கு யோசேவ் வாஸின் கூத்தை மேடையேற்றியபோது, அரச உடைகள், பாப்பாண்டவர் உடைகள், பிக்குவின் உடையமைப்பு, போர்வீரர்களுடைய உடைகள், யூத மக்கள் உடை, ஒப்பனை என குறித்த சமூகத்தினை பிரதிபலிக்கும் வகையில் உடையமைப்புகளை வடிவமைத்தேன்.




**கே: சமூகத்தில் கூத்துக் கலைஞர்களுக்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்பு எவ்வாறு காணப் படுகின்றது?**

ப: ஒரு கலைஞனின் வளர்ச்சிக்குப் பின்னால் பல கதைகள் உண்டு. அந்தக் கலைஞன் வளர்ந்து வருகின்ற போது சமூகம் அங்கீகாரம் கொடுக்கும். சமூக அங்கீகாரம் இல்லையென்றால் ஒரு கலைஞன் வளர்ச்சி பெறமுடியாது. இருப்பினும் என்னுடைய கூத்துக் கலைக்கு என்னுடைய ஊரைப் பொறுத்தவரையில் ஒரு கௌரவம் இருக்கிறது. ஊர் மக்கள் எனக்கு முழு ஆதரவை வழங்குகின்றனர். இருந்தாலும் பல்வேறுபட்ட கௌரவங்களும் பாராட்டுகளும் கிடைக்கும்போது கூட ஆங்காங்கே முகத்தைச் சுளிக்கும் பலரும் இருக்கத்தான் செய்கிறார்கள். அந்தநேரத்தில் அவற்றைக் கண்டுகொள்ளாமல் எதிர்நீச்சல் அடித்துக் கொண்டு போவது தான் ஒரு கலைஞனின் சிறந்த பண்பாகும். ஒரு கலைஞனுக்கு முழுமையான வரவேற்பும் இருக்காது. அதேநேரம் முழுமையான எதிர்ப்பும் இருக்காது. ஆனாலும் அவற்றையெல்லாம் சமாளித்து வீறு நடை போட்டு பயணிப்பதே கலைஞனுடைய ஒரே குறிக்கோளாக இருக்கவேண்டும். அதனையே நானும் பின்பற்றுகின்றேன்.

**கே: கூத்துகளுக்கு பிரதேச கலாசாரப் பேரவைகளின் அங்கீகாரம் உரியவகையில் கிடைக்கின்றதா?**

ப: பிரதேச செயலகம், மாவட்ட செயலகங்கள் ஊடாக கலைஞர்களை நன்றாக மதிக்கின்றனர். ஒருமுறை, பிரதேச செயலகத்தில் ஒருநாள் [illegible] நாட்டுக் [illegible] இருந்தேன். அங்கு கூத்தின் தரத்தைக் கண்டு எனக்கு கூத்து நெறியாளருக்கான விருதை உடனடியாக அச்சிட்டு மன்னார் மாவட்ட முன்னாள் மாவட்டச் செயலர் ஸ்ரான்லி டிமல் வழங்கியிருந்தார். இலக்கிய விழாக்கள் மற்றும் சில நிகழ்வுகளுக்கு கலைஞர்களை அழைத்து கலை நிகழ்வுகளை அரங்கேற்றி கலைஞர்களை கௌரவிக்கின்றனர். பொதுவாகவே ஒரு கூத்தை பழக்கி மேடையேற்றும் போது ஏற்படும் செலவுக்கு வழங்கும் ஊதியம் போதாமலே இருக்கின்றது.

**கே: தற்காலத்தில் உங்கள் பிரதேசத்தில் ஆடப்படும் தென்பாங்கு கூத்துகளின் நிலை எவ்வாறு காணப்படுகிறது?**

ப: எங்கள் ஊரின் பாரம்பரியக் கூத்தான 'சந்தொம்மையார் வாசாப்பு' எங்கள் ஐயாவின் காலத்தில் 3 வருடத்துக்கு ஒரு முறை மேடையேற்றப்படும். பின்னர் 5 வருடத்துக்கு ஒருமுறை மேடையேற்றப்பட்டது. யுத்தத்துக்கு பின்னர் 8 வருடத்துக்கு ஒரு தடவை மேடையேற்றப்பட்டது. இப்பொழுது 10 வருடத்துக்கு ஒரு தடவை மேடையேற்றப்படும் . அதுவும் வறுமை, தொழிலின்மை, விவசாயத்தில் வெள்ளாமை விளைச்சல் இல்லை என கஷ்டங்களை கண்ட பின்புதான் கூத்து மேடையேற்றப்படும். உண்மையைக் கூறினால் முன்னர் இருந்ததைவிட கூத்துகள் மருவிக்கொண்டே போய்விட்டன. ஆனால் நான் ஒரு வருடத்துக்கு ஓரிரு கூத்துகளை மேடையேற்றுவேன். அதாவது ஒளி விழா, ஆலயத்தின் திருவிழா மற்றும் பிரதேசசபை, பிரதேச செயலகங்களால் நடத்தப்படும் இலக்கிய விழாக்களின் போது கூத்துகள் மேடையேற்றப்படுகின்றன ஆனால் இதுவும் திரைப்படங்கள் போன்று 3 மணித்தியாலங்களுக்குள்ளேயே சுருக்கியே ஆற்றுகை செய்யப்படுகின்றது.

**கே: இந்தக்கலையினை அடுத்த தலைமுறைக்கு கடத்துவதற்கு, நீங்கள் எவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றீர்கள்?**

ப: ஆர்வத்தோடு கூத்து நடிக்க வரும் இளைஞர்களை வரவேற்கின்றேன். சிலர் பழகுவதற்கு வருவார்கள், பின்னர் இடையில் நிறுத்தி விடுவார்கள்.


(04 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






எஸ்.ஹரன்சிகா
தரம் - 7D
யா/ இந்து மகளிர் கல்லூரி



கி.யனுசன்,
தரம் - 7
GTMS





நீங்களும்
உங்கள் கைவண்ணங்கள்,
ஆக்கங்களை அனுப்பலாம்.

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555
Sanjeevi@uthayan.com



செ.லக்சினி
தரம் - 7



ம.லிஸ்சி
தரம் - 4
யா/ டிறிபேர்க் கல்லூரி



அ.வைஷ்ணவி.
தரம்- 7.
யா/மகாஜனக் கல்லூரி



கோ.அட்சயன்
தரம் 6
இணுவில் சிவகாமி
அறநெறிப்பாடசாலை

# கூத்துக்கலைக்கு.....

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் நான் கூடுதலாகவே பள்ளி மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் எனது பிள்ளைகளுக்கும் பழக்குவதற்கு காரணமே என்னோடு இந்தக் கலை அழிந்துவிடக்கூடாது என்பதற்காகவே.

**கே: கூத்துக் கலையில் 35 வருடங்கள் பயணிக்கும் உங்களுக்கு கிடைக்கப்பெற்ற விருதுகள் மற்றும் கௌரவங்கள் பற்றி...?**

**ப:** மன்னார் மாவட்டத்தின் முசலிப் பிரதேச செயலகத்தின் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வில், கடந்த 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் 5 ஆம் திகதி, என்னால் உருவாக்கப்பட்ட 'மறைவளர்த்த மாவீரன்' என்கின்ற கூத்தினை மேடையேற்றியதற்காக 'கூத்து நெறியாளர்' விருது முதல் முதலில் எனக்கு கிடைத்தது. காலியில் இடம்பெற்ற ஆசிய பல்கலைக்கழகங்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த நிகழ்விலும் நான் கலந்து கொண்டிருந்தேன்.

பின்பு கடந்த 2017ஆம் ஆண்டு 1 ஆம் திகதி, மே தின நிகழ்வின் போது முத்தரிப்புத் துறையின் பங்குத்தந்தை டெனி கலிஸ்டஸாலும் முத்தரிப்புத்துறை மக்களாலும் பொன்னாடை போத்தி கௌரவிக்கப்பட்டு 'துறையூரான்' என்கின்ற பெயர் எனக்கு சூட்டப்பட்டது. கடந்த 2017 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 22 ஆம் திகதி மன்னார் செபஸ்ரியார் பேராலயத்தில் 'மறை வளர்த்த மாவீரன்' என்ற கூத்துக்காக 'நவீன கூத்து நெறியாளர்' என்கின்ற விருதினை மன்னார் பேராலய அருட்தந்தை பெப்பி சோசை மற்றும் பேராலய மக்கள் மூலமாக வழங்கப்பட்டது.

பின்னர், மன்னார் மாவட்ட செயலகம் ஏற்பாடு செய்திருந்த கலாசார நிகழ்வில் 'மண் கலைச் சுரபி' என்கின்ற விருது கடந்த 2017 ஆம் ஆண்டு நவம்பர் 25ஆம் திகதி, மாவட்ட செயலாளர் எம். வை. எஸ். தேசப்பிரியவால் வழங்கப்பட்டது.

மேலும் 2019 ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்தின் 'பொக்கிஷம்' என்ற அமைப்பினரால் என் கலைச் சேவையைப் பாராட்டி விருது ஒன்றும், அத்துடன் 2020 ஆம் ஆண்டு மன்னார் பிரதேசசபை கலாசாரப் பேரவையால் 'கலைஞர் சுவதம்' என்ற விருதும் சான்றிதழும் வழங்கப்பட்டன.

இறுதியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 20ஆம் திகதி நடைபெற்ற ஒளி விழா நிகழ்வில் 'விடிவெள்ளி காட்டிய விடியல்' என்கின்ற கூத்துக்குக்கு பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா மற்றும் யாழ் .மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் ஆண்டகை இருவரும் இணைந்து பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். இந்த விருதுகளும் கௌரவங்களும் என்னை இன்னும் கூத்துக்கலை நோக்கி உந்தித்தள்ளும் விசையாக தொழிற்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காசேதான் கடவுளப்பா!

ஆர்.பிரகாஷ்

ஐக்கிய நாடுகள் சபையின் ஏகப்பட்ட தொடர்ச்சியான கோரிக்கைகள், அமெரிக்காவின் வலியுறுத்தல்கள், உலகப் பெண் தலைமைகள் மற்றும் ஆளுமைகளின் அழுத்தங்கள் இவற்றுக்கெல்லாம் பணிந்து கொடுக்காமல் பெண்கள் விவகாரத்தில் உடும்புப்பிடிப் போக்கைக் கடைப்பிடித்து வந்த சவூதி அரேபியா, தற்போது பெண்களுக்குச் சுதந்திரத்தை வழங்குவதற்குத் தானாக முன்வந்துள்ளது.

பெண்கள் வாகனம் செலுத்துவதற்கு அனுமதி, விடுதிகளுக்குச் செல்வதற்கு அனுமதி, கால்பந்தாட்டங்களை நேரில் பார்ப்பதற்கு அனுமதி, ஆண்களின் துணையில்லாமல் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு அனுமதி, இராணுவத்தில் சேர்வதற்கான அனுமதி என்று ஒவ்வொன்றாக அவிழ்க்கப்பட்டுக் கொண்டிருந்த இந்தச் சுதந்திரப் பட்டியலில் தற்போது பெரும் பாய்ச்சல் நிகழ்த்தப்பட்டிருக்கின்றது. அதுதான் பிரபஞ்ச அழகிப் போட்டியில் சவூதிப் பெண் பங்கெடுக்கும் விவகாரம். போட்டியின் விதிமுறைகள் மற்றும் நடைமுறைகளுக்கு அமைய பங்கேற்பதற்காக 27 வயதான ரூமி அல்ஹக்தானி என்ற பெண்ணை சவூதி களமிறக்கியுள்ளது. பர்தா, புர்கா என்ற ஆடைகளால் தன்னுடலை இறுக்கமாக மறைத்துத் திரிவதே பெண்ணுக்குக் கண்ணியம் என்றிருந்த சவூதி, பிரபஞ்ச அழகிப்போட்டிக்காக, போட்டியின் ஆடை விதிமுறைகளையெல்லாம் பின்பற்றிப் பங்கெடுப்பதற்காக பிரதிநிதியொருவரை அனுப்புவதென்பது அவ்வளவு இலகுவான விடயமல்ல. உலகத்திருப்பம் இது.

சவூதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் மொகமட் பின் சல்மான், பெண்கள் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் விதிமுறைகளை ஏன் இவ்வளவு தூரம் கைவிடுகின்றார். அவர் ஒரு பெண்ணியவாதியா? பெண்கள் அடிமைத் தனத்தை சவூதி வெறுக்கின்றதா? இல்லவேயில்லை. பணம்தான் இங்கே பிரதானம். 'பணம் மற்றும் அதுசார் முதலீடுகள்' என்பதை வைத்துத்தான் சவூதிப் பெண்களுக்கான சுதந்திரம்கூடத் தீர்மானிக்கப்படுகின்றது என்பதுதான் உண்மை.

சவூதியின் பெரும் பொருளாதாரம் கச்சா எண்ணெய்தான். உலகின் கச்சா தேவையில் குறிப்பிடத்தக்க அளவை தனித்து நின்று நிறைவேற்றுகின்றது சவூதி. கச்சாவுக்கு இதுவரை இருந்த கேள்விகளின் அடிப்படையில் பொருளாதார வீழ்ச்சியென்பது சவூதிக்குத் தொலைதூரம். ஆனால், இனிவரும் காலங்கள் அப்படியாக இருக்காது.

அள்ளஅள்ளக் குறையாத கச்சா வளம் சவூதியில் இருந்தாலும் ஈரானும் சவூதிக்கு நிகராக கச்சாத் துறையில் வளர்ந்துவிட்டது. சவூதியில் இருப்பதை விடவும் மிகப்பெரும் கச்சா வயலை ஈரான் அடையாளப்படுத்தியுள்ளது. அதேநேரம் உலக நாடுகள் கச்சாவுக்கு மாற்றான திட்டங்களைத் தேடிக் கொண்டிருக்கின்றன. எரிபொருளில் இயங்கும் வாகனங்களுக்குப் பதிலாக சூரிய ஒளியில் இயங்கும் வாகனங்கள் தற்போது தாராளமாகவே பயன்பாட்டுக்கு வந்துள்ளன. அத்துடன் ஒவ்வொரு அரசும் இந்தத் 'தன்னிறைவு' வாகனங்களைக் கொள்வனவு செய்யும்படியே தம் மக்களுக்கு அறிவுறுத்தி - ஊக்குவித்து வருகின்றன. இவ்வாறானதொரு நிலையில் வெறுமனே கச்சாவைச் சார்ந்திருக்காமல் வேறு பொருளாதாரத் தேடல்களை சல்மான் மேற்கொண்டார். அதன் விளைவே பெண்கள் மீதான இறுக்கமான நடைமுறைகளைத் தளர்த்தும் முயற்சிகள்.

**பெண்கள் விடுதலையும் சவூதிப் பொருளாதாரமும்**

பெண்களுக்கு விடுதலை வழங்குவதற்கும் சவூதியின் பொருளாதாரம் மேம்படுவதற்கும் என்ன தொடர்பு இருந்துவிட முடியும்?. சவூதி பாரம்பரியங்கள் மற்றும் பழைமைகளுக்குப் பஞ்சம் இல்லாத நாடு. மக்கா, மதீனா போன்ற நகர்கள் இதற்கு ஆகச்சிறந்த எடுத்துக்காட்டுகள். சுற்றுலாத்துறையை அங்கு வெகுவாகக் கட்டியெழுப்பலாம். ஆனால் பெண்ணடிமைத்தனச் சிந்தனைதான் சவூதி மீது பெரும் கறுப்புப் புள்ளியை உலக அளவில் ஏற்படுத்தியுள்ளது. இதனால் பெண்ணியவாதிகளும், தம்பதிகளும், பெண்களும் சவூதிக்குச் சுற்றுலா மேற்கொள்ள விரும்பார்கள். இந்த நிலையில் பெண் சுதந்திரத்தை வழங்கி தன்னையும் சராசரி நாடு என்ற பிம்பத்தை ஏற்படுத்த வேண்டிய தேவை சவூதிக்கு இருந்தது- இருக்கின்றது. இதனால்தான் சவூதியில் சுற்றுலாத்துறை தொடர்பான விடயங்களில் எல்லாம் பெண்ணடிமைத்தனம் கைவிடப்படும் பாங்கு பூதாகரமாக்கப்பட்டு விளம்பரப்படுத்தப்படுகின்றது.

அத்துடன் வெறுமனே ஆண்களை மட்டும் சார்ந்திருக்காமல் பெண்களையும் உழைப்பை நோக்கித் தள்ள வேண்டிய நிலை சவூதிக்கு. இவையெல்லாம் ஒன்றுசேர்ந்துதான் தற்போது சவூதிப் பெண்களின் விலங்குகள் ஒடிக்கப்படக் காரணமாகியுள்ளன. சவூதிப் பெண்களுக்கு சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ள துறைகளின் வரிசைப்பட்டியலே இதை மெய்ப்பிதம் செய்கின்றது. ஆக, சவூதி மேற்கொண்டிருப்பது ஒரு முதலீட்டுத் திட்டம். மற்றும்படி சவூதியை மெய்ச்சுவதற்கு ஒன்றுமில்லை. காசேதான் கடவுளப்பா. அந்தக் கடவுளுக்கும் இது தெரியுமப்பா!



தி.ராஜ்

# ஏமாறப் பிறந்தவர்கள்

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்று முன்னோர் சொன்னதாலோ என்னவோ வெளிநாட்டுக்குச் செல்வதையே இலக்காகக் கொண்டு இளம் தலைமுறை வளர்ந்து வருகின்றது. போர்க்காலத்தில் உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்கு பலர் இங்கிருந்து மேற்கத்தைய நாடுகளுக்குச் சென்றனர். போரின் பின்னரான நெருக்கடியான சூழலிலும் அத்தகைய புலம்பெயர்வு இருந்தது. உயிரைக் காப்பாற்றிக் கொள்ளச் சென்றவர்கள் பொருளாதார நிலையில் தம்மை உறுதிப்படுத்திக்கொண்டனர். அவர்களின் வளர்ச்சிகளைப் பார்த்த இங்குள்ள பலரும், வருமானத்தை பெருக்கிக் கொள்வதற்காக புலம்பெயர்வை நாடினர். தற்போதும் இந்தக் கலாசாரம் இங்கு தொடர்கின்றது.

புலம்பெயர்தலுக்காக பெரும்பாலும் சட்டவிரோத முறைகளையே நாடுகின்றனர். கடந்த காலங்களிலும் இவ்வாறுதான் புலம்பெயர்ந்திருந்தனர். 'ஏஜென்சிக்காரர்' என்று ஊரில் அழைக்கப்படும் முகவர்கள் ஊடாகவே பலர் வெளிநாடுகளைச் சென்றடைந்தனர். ஆனால் சகல முகவர்களும் தம்மிடம் பணத்தைக் கொடுத்தவர்களைப் பத்திரமாகக் கொண்டு சென்று விடவில்லை. அன்றைய காலத்திலும் பணத்தைப் பெற்றுக் கொண்டு ஏமாற்றிய முகவர்கள் இருந்தனர். பலரை இங்கிருந்து ஏற்றிவிட்டு உரிய நாடுகளுக்கு அனுப்பாமல், இடைநடுவில் வேறு நாடுகளில் இறக்கிவிட்டு அவர்கள் தப்பிச்சென்றும் இருந்தனர். உரிய நாடுகளைச் சென்றடையாமல் வேறு இடங்களில் கைவிடப்பட்டவர்கள் உயிரிழந்த சம்பவங்களும் இருக்கின்றன. அண்மைக் காலங்களில் சில நாடுகளுக்குச் செல்வதற்காகப் போர் நடைபெறும் நாடுகளுக்கு கொண்டு சென்று முகவர்கள் இறக்கிவிடுகின்றனர். அங்கு போரில் சிக்கி உயிரிழக்கும் சம்பவங்களும் அல்லது எல்லைகளைச் சட்டவிரோதமாகக் கடக்கும்போது அங்கு சிக்கி உயிரிழக்கும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. சட்டவிரோதமாகச் சென்றவர்கள் அந்த நாடுகளில் குடியுரிமை பெறாமல் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டும் உள்ளனர்.

ஆனாலும் இவை எவற்றாலும் இங்கிருப்பவர்கள் அசர்வதாகத் தெரியவில்லை. எப்படியாவது வெளிநாட்டுக்குச் செல்லவேண்டும் என்பதற்காக எதையும் இழக்கத் தயாராக இருக்கின்றார்கள்.

வெளிநாட்டுக் கனவு காரணமாக வடக்கைச் சேர்ந்த 139 பேர் தங்களின் 254 கோடி ரூபாவை முகவர்களிடம் கொடுத்து ஏமாந்திருக்கின்றனர். அதுவும் 2023ஆம் ஆண்டு மாத்திரம் இவ்வளவு பெரும் தொகையை வடக்கைச் சேர்ந்தவர்கள் இழந்திருக்கின்றார்கள். பொருளாதார நெருக்கடிக்குள்ளும் இவ்வளவு பெரிய பணத்தொகையை வெளிநாட்டுக்கனவுக்காகத் தொலைத்திருக்கும் அபத்தத்தை எங்கு சொல்லியழமுடியும்?

முகவர்கள்ால் ஏமாற்றப்படுவது தொடர்பில் பல தடவைகள் எச்சரிக்கப்பட்டிருந்தாலும் மக்கள் அதைச் செவிமடுப்பதாக இல்லை. இந்த மோசடி தொடர்பில் பல்வேறு செய்திகள் வெளிவந்திருந்தாலும் மக்கள் அதையெல்லாம் கவனத்திலெடுக்காமல் மீண்டும் மீண்டும் பணத்ந்தக் கொடுத்து ஏமாறுகின்றனர். முன்பின் தெரியாத முகவர்களிடம் கூட பல லட்சம் ரூபாவை வெளிநாட்டுக்குச் செல்வதற்காகக் கொடுப்பவர்கள், அந்தப் பணத்தை இங்கே முதலிட்டு தமக்கான தொழில்வாய்ப்பை உருவாக்க முடியாதவர்களாக இருக்கின்றார்கள்.

சட்டவிரோதமான முறையில் புலம்பெயர்வுக்கு முயன்று பணத்தை இழப்பதைத் தடுக்கவேண்டும். இளைய தலைமுறையின் புலம்பெயர்வுக்கு அடிநாதமாக இருக்கும் பொருளாதாரத் தேவைப்பாடுகளை நிறைவு செய்யும் வகையில் தொழில்வாய்ப்புகள் உருவாக்கப்படவேண்டும். அத்துடன் தொழிலுக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படுவதையும் உறுதிப்படுத்தவேண்டும். புலம்பெயர் தமிழர்கள் பலர் இப்போது தாயகத்தில் முதலிடுகின்றனர். அவர்களாலேயே தற்போதைய புலம்பெயர்வுகளைத் தடுத்து நிறுத்த முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயேசுவின் உயிர்ப்பில் புதுவாழ்வு பெறுவோம்!

அருட்தந்தை றமேஸ் அ.ம.தி

விடிந்து கொண்டிருந்தது... ஜெருசலேம் நகரம் இன்னும் துயிலெழவில்லை. சில பெண்களுக்கு மட்டும் தூக்கமில்லை. விடிந்தும் விடியாத நிலையில் நறுமணப் பொருள்களுடன் மங்கையர் மூவர் ஒரு கல்லறையை நோக்கி விரைந்து சென்றனர். பலவிதமான ஐயப்பாடுகளுடனும், அச்சத்துடனும் நடுக்கத்துடனும் சென்றாலும் தங்கள் அன்புத்தெய்வத்தைத் தேடி, இனிய தூய நினைவுகளுடன் கல்லறையைப் பார்த்தனர். அளவற்ற ஏமாற்றம் அடைந்தனர். ஆனால் அங்கே ஒரு வானவரால் 'அவர் இங்கே இல்லை. அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்...'. கேட்டவுடன் ஆனந்தம் கொண்டனர். அனைவருக்கும் இந்த நல்ல செய்தியை அறிவித்தனர்.

கிறிஸ்துவின் உயிர்ப்புநாள் என்பது வானம் பூமிக்கு வாழ்த்துக் கூறிய ஒரு நன்நாள். ஒளியிடம் இருள் தோற்றுப் போனதை உலகத்துக்கு எடுத்துச் சொல்லுகின்ற பெருநாள். வீழ்ந்தோருக்கும், வறியோருக்கும் உதயம் உண்டு எனும் நம்பிக்கையை நிலைநாட்டுகின்ற திருநாள். இவ்வுலகில் ஒளிக்கும் இருளுக்கும், உண்மைக்கும் பொய்மைக்கும், நீதிக்கும் அநீதிக்கும், அன்புக்கும் அராஜகத்துக்கும் இடையே போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.
இந்தப் போராட்டத்தில் ஒளியின் சக்திகளும், உண்மையின் சக்திகளும், நீதியின் சக்திகளும், அன்பின் சக்திகளும் வெற்றிபெறும் என்பதை உணர்த்தும் விழாதான் உயிர்ப்பு விழா. தீமைக்கும், பொய்மைக்கும், இருளுக்கும் வன்முறைக்கும், சாவுமணி அடிக்கும் விழாதான் உயிர்ப்பு விழா. உண்மை உறங்கும் ஆனால் ஓயாது! நீதி நசுக்கப்படும் ஆனால் நலியாது! அன்பு அமுக்கப்படும் ஆனால் அழியாது என்பதை சுட்டிக் காட்டும் விழாதான் உயிர்ப்பு விழா.

அன்று 'உங்களுக்கு அமைதி உரித்தாகுக' என்ற இயேசுவின் வார்த்தை துயரத்தின் எல்லையை அடைந்த சீடர்களின் சோர்வுக்கும், தேய்வுக்கும் ஒரு முடிவு கண்டு உள்ளத்துக்கு அமைதியையும் மகிழ்ச்சியையும் அளித்தது. போர் நெருக்கடியும், அபாயமும், கோடிக்கு மேற்பட்ட அகதிகளின் அவல நிலையும், இயற்கையின் சீற்றமும் அதனால் ஏற்பட்ட சேதமும், கூட்டக் கொலைகளும், கொடுமைகளும் தாண்டவமாடும் இந்த நாள்களில் கிறிஸ்துவின் உயிர்ப்பு எமக்கும், அன்பு, அமைதி, நீதி ஆகிய நற்பண்புகளை அள்ளித்தரும் உயிருள்ள வார்த்தைகளை அளித்திடவேண்டும் என்பதே எங்களது ஆவலாக உள்ளது.
இன்று நாடு, சமூகம், மொழி, இனம், குலம், யாவும் மனிதனை மனிதனின்று பிரிக்கும் பின்னிப்பின் சின்னங்களாக காட்சியளிக்கின்றன. கிறிஸ்து அவனிக்கு அளித்த அன்பு, அமைதி, ஈகை, இரக்கம் இவை யாவும் மண்ணோடு மண்ணாய் மறைந்து விட்டனவா? என்ற வினாக்கள் எம்மிடையே எழுகின்றன.
மனிதனுடைய அறிவும் நாகரிகமும், பண்பாடும் மேம்பாடும் பல வெற்றிகளை உலகிற்கு அளித்த போதும் போரை உலகினின்று ஒழிக்கவில்லை. நாளும் துன்பச் சுமைகளைச் சுமந்தவர்களாக, கவலையோடும் கண்ணீரோடும், பசியோடும் பிணியோடும் விடிவே கிடையாதா என்று சாவை நோக்கி வாழ்ந்து கொண்டிருக்கும் எங்களுக்கு இயேசுவின் உயிர்ப்பு உண்மையான விடுதலையையும் அமைதியையும் பெற்றுத்தராதா என்பதே எங்கள் ஒவ்வொருவரினதும் ஏக்கமும் எதிர்பார்ப்புமாக உள்ளன.
இலட்சியவாதிகள், நல்மனம் படைத்தவர்கள், அன்புள்ளம் கொண்டவர்கள் தோல்வியை சந்திக்கலாம். ஆனால் அவை நிரந்தரமானவை அல்ல. ஒளி வரும்வரை தான் இருளின் ஆட்சி. ஒளி வந்துவிட்டால் இருளுக்கு வீழ்ச்சி. தர்மத்தின் சக்திகளும், நன்மையின் சக்திகளும் இறுதியில் வெற்றி அடைவது திண்ணம். இறைமையும், மனித நேயமும் வெற்றி வாகை சூடுவது உறுதி.
இதுதான் பல எதிர்பார்ப்புக்களுடன் கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவை நோக்கும் எமக்கு கிறிஸ்து கூறும் பதிலாகவுள்ளது. எனவே இலட்சியவாதியை சாவு தன் சங்கிலிக்குள் வைத்திருக்க முடியாது என்பதை உணருவோம். உள்ளங்களுக்குள் ஒழிந்திருக்கிற பகைமை இருளை இயேசுவின் உயிர்ப்பு என்னும் கரணை வெளிச்சத்தால் விரட்டுவோம். கண்ணீருக்கும் கவலைகளுக்கும் இனி விடை கொடுப்போம். புதிய நம்பிக்கையோடு எமது வாழ்வில் [illegible] போடுவோம்.



# தமிழ்ப் பொது வேட்பாளர்;

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவருடைய மனைவி தனியார் விடுதி ஒன்றில் இருந்து அதற்கான அழைப்பையும் எடுத்தார். இம்முறை சஜித் அந்த விடயத்தைப் பொருட்படுத்தவில்லை என்று தெரிகிறது. சுமந்திரனும் சாணக்கியனும் தனக்குச் சாதகமாக தமிழ் வாக்குகளைத் திரட்டுவார்கள் என்று அவர் நம்புகிறார் போலும். மனோ கணேசன்,ரவூப் ஹக்கிம் போன்றவர்கள் தமிழ் வாக்குகளையும் முஸ்லிம் வாக்குகளையும் தன்னை நோக்கிச் சாய்க்கலாம் என்றும் அவர் நம்புவதாகத் தெரிகிறது. அதனால்,தமிழ்ப் பொது வேட்பாளரைக் குறித்து அவர் அலட்டிக் கொள்ளவில்லை.

அப்படித்தான் ரணிலும் ஜே.வி.பி.யும். தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் சிங்கள வேட்பாளர்களுக்குப் பதற்றத்தை ஏற்படுத்தும் ஒரு வளர்ச்சிக்கு இன்னும் வரவில்லை. அதை நோக்கி தமிழ்க் கட்சிகள் கட்டமைப்பாக ஒன்றிணையவில்லை.
அவ்வாறு தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்தாலும், சிங்கள வேட்பாளர்களுடன் பேரம் பேசுவது என்ற தெரிவை முதன்மைப்படுத்துவது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை நியாயப்படுத்துவதாக அமையலாம்.

ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரின் கோரிக்கைகள் தொடர்பாக குத்துவிளக்குக் கூட்டணியோ அல்லது ஏனைய அமைப்புகளோ இறுதி முடிவு எதையும் எடுக்கவில்லை என்று தெரிகிறது. தமிழ்ப் பொது வேட்பாளரின் கோரிக்கைகள் சிங்கள வேட்பாளர்களுடன் பேரம் பேசக் கூடியவைகளாக அமைய வேண்டும் என்று குத்து விளக்குக் கூட்டணிக்குள் உள்ள சில கட்சிகள் கருதுவதாகத் தெரிகின்றது. அவ்வாறு சிங்கள வேட்பாளர்களை நோக்கித் தமிழ்ப் பொது வேட்பாளரின் கோரிக்கைகளை வளைப்பது என்பது, 13 ஐ அமுல்படுத்துவது வரையிலும் போகமுடியும். ஆனால்,தமிழ் மக்களின் கோரிக்கைகளை சிங்கள வேட்பாளர்களை நோக்கி வளைப்பதற்கு ஒரு தமிழ்ப் பொதுவேட்பாளர் தேவையில்லை. தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவதற்குத்தான் அது தேவை.

தமிழ்ப் பொது வேட்பாளர் தெரிவு எனப்படுவது பேரம் பேசலுக்கானது என்பது அதன் முதன்மை நோக்கம் அல்ல. முதன்மை நோக்கம் எதுவென்றால், தமிழ் மக்களை ஒரு தேசமாகக் கட்டியெழுப்புவதும் தமிழ் மக்களின் ஐக்கியத்தை உலகத்துக்குக் காட்டுவதும் தமிழ் மக்களின் உச்சமான கோரிக்கைகளுக்குரிய ஆகப் பிந்திய மக்கள் ஆணையை பெறுவதும்தான். தமிழ்ப் பொது வேட்பாளர் எனப்படுவது தமிழ் ஐக்கியத்தின் குறியீடு. தமிழ் மக்களை ஒரு தேசமாகக் கட்டியெழுப்பும் ஒரு தெரிவு. தமிழ் மக்களின் உச்சமான கோரிக்கைகளை முன்வைத்து ஜனாதிபதித் தேர்தலை ஒரு மறைமுக பொதுசன வாக்கெடுப்பாகப் பயன்படுத்தும் ஒரு தெரிவு. தேர்தல் முடிவை தமிழ் மக்களின் ஆகப் பிந்திய மக்கள் ஆணையாக உலகத்துக்கு காட்டப்படலாம்.

மாறாக,பேரம் பேசுவதை அடிப்படையாக வைத்து சிந்தித்தால்,அது தமிழ் மக்களின் கோரிக்கைகளை சிங்கள வேட்பாளர்களை நோக்கி வளைப்பதில் தான் போய்முடியும். மேலும்,பொது வேட்பாளர் உச்சமான கோரிக்கைகளை முன்வைத்தால் பேரம் பேசலுக்கான வாய்ப்புக் குறைந்து விடும். எந்த ஒரு சிங்கள வேட்பாளரும் அவரோடு பேரம் பேசி தனக்குரிய சிங்கள - பௌத்த வாக்குகளை இழக்கத் தயாராக இருக்க மாட்டார்.

அதேசமயம், தமிழ் மக்களின் உச்சமான கோரிக்கைகளை முன்வைத்து மக்கள் ஆணையைப் பெறுவதற்குரிய மறைமுக வாக்கெடுப்பாக ஜனாதிபதித் தேர்தலைப் பயன்படுத்தி அதில் தோல்வி கண்டால், அது தமிழ் மக்கள் ஒரு தேசமாக இல்லை என்பதை வெளியுலகத்துக்கு நிரூபித்து விடும் ஆபத்தும் உண்டு. எனவே ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை நிறுத்துவது என்று முடிவு எடுத்தால், அதற்காகக் கூட்டாக உழைக்கவேண்டும். அர்ப்பணிக்கவேண்டும். அது ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை வெற்றி பெறச் செய்வதற்கான உழைப்பு என்பதை விட, தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான உழைப்பு என்பதே சரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்குள் தமிழ்த்தேசியம்

## வரலாறும் அதன் பயணப்பாடும்

பிரஜீவன் ராம்



தனிச்சிங்களச் சட்டத்துக்கு எதிராக 1956 ஆம் ஆண்டு ஆரம்பமான காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகப் போராட்டம் தோல்வியில் முடிவடைந்தாலும், தமிழ்த்தேசியவாதிககளின் உரிமைப் போராட்டம் தொடர்ந்த வண்ணமே இருந்தது.

இவ்வாறான சூழ்நிலையில் 1957ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கை அரசாங்கம் ஆங்கில எழுத்துகளுக்குப் பதிலாக சிங்கள 'ஸ்ரீ' எழுத்தை வாகன இலக்கத்தகடுகளில் பிரயோகிக்கும் சட்டத்தை அமுல்படுத்தியது. இதனைக் கடுமையாக எதிர்த்த தமிழரசுக் கட்சியினர் சட்டமறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். எனினும் இந்தப் போராட்டம் தீரவிரம் அடைவதற்கு முன்னர் 1957ஆம் பண்டா - செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதனால் ஈழமக்களின் உரிமைப் போராட்டத்தில் சிறு தொய்வும் ஏற்பட்டது. எனினும் 1958 ஆம் ஆண்டு ஏப்ரலில் பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டதனைத் தொடர்ந்து முன்பு இருந்ததைவிட பல மடங்கு தமிழின உணர்வுடன், சட்டமறுப்பு போராட்டத்தில் தமிழ்மக்கள் ஈடுபட ஆரம்பித்தனர்.

### தீவிரமடைந்த 'ஸ்ரீ 'எதிர்ப்பு

யாழ்ப்பாணத்தில் தொடங்கிய சட்டமறுப்புப் போராட்டம் திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு, மன்னார் என விரிவடைந்து சென்றது. எல்லா மோட்டார் வண்டிகளிலும் தமிழ் 'ஸ்ரீ' எழுத்தைப் பொறிக்கும்படி தமிழ்த்தேசியவாதிகளால் வேண்டப்பட்டது. தமிழரசுக் கட்சியின் தொண்டர்கள் தமிழ் எழுத்து பொறித்த தகடுகளை வாகனங்களில் மாட்டினர். சிங்கள எழுத்துகள் தார் பூசி அழிக்கப்பட்டன. மறுபுறம் தமிழரசுக் கட்சியின் 'ஸ்ரீ' எதிர்ப்புப் போராட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தென்பகுதியில் சிங்களவர்களால் தமிழ் எழுத்துக்கள் தார் பூசி அழிக்கப்பட்டன. இரு இனத்தவரும் மொழி ரீதியாக தீவிரமாக மோதிக் கொள்ள ஆரம்பித்தனர். சிங்கள - பௌத்த தேசியவாதிகள் தமிழின வெறுப்பை நாடு முழுவதும் வெளிப்படுத்த ஆரம்பித்தனர். தமிழர்கள் என்ற இன அடிப்படையில் மலையக மக்கள் வசித்த பகுதிகளிலும், தமிழ் எழுத்துகளை அழிக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

**தமிழரசுக் கட்சியின் 'ஸ்ரீ' எதிர்ப்பு போராட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் தென்பகுதியில் சிங்களவர்களால் தமிழ் எழுத்துக்கள் தார் பூசி அழிக்கப்பட்டன. இரு இனத்தவரும் மொழி ரீதியாக தீவிரமாக மோதிக் கொள்ள ஆரம்பித்தனர்.**



குறிப்பாக பொகவந்தலாவையில் இவ்வாறு தமிழ் எழுத்துக்கள் அழிக்கப்பட்டபோது தமிழ்த் தொழிலாளர்கள் இதனை எதிர்த்துப் போராட்டம் நடத்தினர். போராட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சிக்கி, அந்தப் பகுதியைச் சேர்ந்த பிரான்சிஸ், ஐயாவு என்கின்ற இரண்டு தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர். இந்தக்கொலைகளைக் கண்டித்து 1958 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 5 ஆம் திகதி வடக்கு - கிழக்கு எங்கும் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் இடம்பெற்றது. மலையகத்தைச் சேர்ந்த பிரான்சிஸ், ஐயாவு ஆகிய இரு தமிழர்களின் உயிர் தியாகத்தை சுட்டிக்காட்டும் சில அரசியல் ஆய்வாளர்கள், தமிழர் என்ற இன உணர்வின் அடிப்படையில் மலையகத் தமிழர்கள் வடக்கு - கிழக்கு மக்களுடன் இணைந்து இரத்தம் சிந்திய முதலாவது அரசியல் உரிமைப் போராட்டம் இது என அடையாளப்படுத்துகின்றனர்.

இவ்வாறான தொடர் போராட்டங்களால் வடக்கு - கிழக்குப் பகுதியில் தனிச்சிங்களச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் செயற்பாடும் முடக்கப்பட்டது. எனினும் சிங்கள - பௌத்த அரசாங்கம் தனது தோல்வியை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

தொடர் போராட்டங்களால் வடக்கு – கிழக்குப் பகுதியில் தனிச்சிங்களச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் செயற்பாடும் முடக்கப்பட்டது. எனினும் சிங்கள – பௌத்த அரசாங்கம் தனது தோல்வியை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

1961ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நாடு முழுவதும் தனிச்சிங்களச் சட்டம் பூரணமாக அமுல்படுத்தப்படும் என சிங்கள அரசாங்கம் அதிரடியாக அறிவித்தது. மறுபுறம் அதே ஆண்டு ஜனவரி மாதம் 21ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் ஏழாவது மாநில மாநாட்டில் தனிச்சிங்களச் சட்டத்துக்கு எதிராக பெப்ரவரி 20ஆம் திகதி தொடக்கம் சத்தியாக்கிரகப் போராட்டத்தை முன்னெடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

நாள்கள் கழிந்தன. தமிழரசுக் கட்சி. உறுப்பினர்கள் மாநாட்டில் தீர்மானித்ததன் படி பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்கு முன்னால் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

யாழ்ப்பாணத்தில் தொடங்கிய போராட்டம் மெல்லமெல்ல விரிவடைய ஆரம்பித்தது. பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துக்கு முன்னாலும் மார்ச் மாதம் 4ஆம் திகதி திருகோணமலை மாவட்டச் செயலகத்துக்கு முன்னாலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இவ்வாறான சூழ்நிலையில் திருகோணமலை மாவட்டத்தில் போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் ஐந்துக்கும் மேற்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டக்காரர்கள் படுகாயமடைந்தனர். அதில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஏகாம்பரமும் உள்ளடங்குவார். பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளான ஏகாம்பரம் வீடு திரும்பிய வேளை திடீரென ஏற்பட்ட மாரடைப்புக் காரணமாக அகால மரணமடைந்தார். இன்றுள்ள சில தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்போல் இருக்கையை அலங்கரிக்காமல், தமிழின இருப்புக்காக தமிழின உணர்வுடன் போராடி மாண்ட ஏகாம்பரத்தின் மரணம் போற்றலுக்குரியது. ஏகாம்பரத்தின் மரணத்தைத் தொடர்ந்து சத்தியாக்கிரகப் போராட்டம் மேலும் வலுப்பெற ஆரம்பித்தது. வவுனியா, மன்னார் மாவட்டங்கள் வரை போராட்டம் தீவிரமடைந்தது.

### களமிறங்கிய இராணுவம்

சுமார் இரண்டு மாதங்கள் வரை இடம்பெற்ற போராட்டம் வலுப்படுவதை உணர்ந்த சிங்கள - பௌத்த அரசாங்கம் போராட்டக்காரர்களை நசுக்கத் தீர்மானித்தது. அதன் அடிப்படையில் 1961 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 17ஆம் திகதி அவசரகாலச்சட்டமும், இந்தச் சட்டத்துடன் இணைந்த வகையில் 48 மணிநேர ஊரடங்குச் சட்டமும் பிறப்பிக்கப்பட்டன. இதனூடாக தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்க இராணுவத்தினர் முதல் முதலாக தமிழ்மக்களுக்கு எதிராக களமிறக்கப்பட்டனர். யாழ். மாவட்டச் செயலகத்துக்கு முன்னால் அகிம்சை வழியில் போராடிய தமிழ்மக்கள் மீது இராணுவத்தினர் கடுமையான தாக்குதல் நடத்தினர்.

சத்தியாகிரகப் போராட்டத்தில் பங்குபற்றிய தலைவர்கள் கைது செய்யப்பட்டு பொலிஸ் மற்றும் இராணுவ முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டனர். தமிழரசுக் கட்சியும் ஈழத்தில் வெளியான 'சுதந்திரன்' பத்திரிகையும் சிங்கள அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்டது. பத்திரிகைத் தணிக்கைச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.


இன்றுவரை தமிழரசுக் கட்சியினரின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட மிகப்பெரிய அகிம்சைப் போராட்டமாக வர்ணிக்கப்படும் சத்தியாக்கிரகப் போராட்டம் சிங்கள அரசாங்கத்தால் நசுக்கப்பட்டது. எனினும் தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரகப் போராட்டத்தின் ஊடாக தமிழ் மக்கள் பிரிவினைகளை கடந்து மொழி அடிப்படையிலான இன உணர்வுடன் ஒன்றிணைந்தனர்.

உதாரணமாக பெரும்பான்மையான மலையக மக்கள் தனிச்சிங்களச் சட்டத்துக்கு எதிரான சத்தியாக்கிரகப் போராட்டத்துக்கு தமது முழுமையான ஆதரவை வழங்கினர். குறிப்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் தொண்டமான் போராட்டக் களத்துக்கு நேரடியாகச் சென்று சத்தியாக்கிரப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு நம்பிக்கையளித்தார், உற்சாகப்படுத்தினார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

○ கோகுலராகவன்



# காணியை வித்தன், கனடா போனன்




காணி வேலியில் கம்பிக் கட்டுக்கள் அறுந்திருந்தன. அதுகளைக் கட்டுவம் என்று பள்ளிக்கூடத்தால் வந்து சாப்பிட்டுவிட்டு, படுக்காமல் கொஞ்சம் போனை நோண்டி விட்டு காணிக்குப் போயிருந்தேன்.

பக்கத்துக் காணி நாகராசா மாமாவுடையது. விழு தேங்காய் பார்க்க வருவார். வந்திருந்தால் என் பாடு திண்டாட்டம்தான். கதைக்க வந்தால் நான் வேலி கட்டினபாடு இல்லை. எட்டிப் பார்த்தேன் .

ஆள் சிலமன் இல்லை தப்பினேன்.

ஒரு பத்து கதியால்தான் கட்டி இருப்பேன்.

"என்ன வேலி அடைக்கிறியளோ?"

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன்.

நாகராசா மாமா வேலிக்கதியாலைப் பிடித்தபடி சிரித்தார்.

"ஓம் ஓம். அறுந்ததைப் பார்த்துக் கட்டிறன்"

"காணியளால வருமானம் காணாது பராமரிக்கக் கண்டியளோ."

"ஓமோம்."

"சும்மா உக்கின கத்தியால திருப்பி, திருப்பிக் கட்டிறதை விட்டிட்டு கனடாவுக்குப் போங்கோவன்"

"கனடாவோ....நாகராசா மாமா இண்டைக்கு ஒரு முடிவோடைதான் வந்திருக்கிறியள் போல.

என்னைக் கனடாவுக்கு அனுப்பி போட்டுதான் மற்ற வேலை போல"

சிரித்தார்.

"எல்லாரும் ஓடுறாங்கள். நீங்களும் போகலாம்தானே."

"இதென்ன கொடிகாமம் சந்தையே? கருக்கலோடை போய்வர"

"என்ன மாஸ்ரர் ? ஆட்டோக்காரன் ஆட்டோவை வித்துப்போட்டு ஓடுறான். கடைக்காரன் கடையைப் பூட்டிப் போட்டு ஓடுறான்.வாத்திமாரும் வேலையை விட்டு ஓடுறாங்கள். அவனவன் பெரிய பெரிய வேலையை விட்டிட்டு ஓடுறான்.உங்களுக்கு என்ன, மச்சாளிட்டை சொன்னா எடுப்பா தானே?"

மாமா நோயும் சொல்லி நோய்க்கு மருந்தும் சொல்லுவார். ஆனால் நோய் மாறாது.

"சரியாக வராது மாமா. உல்லாசப் பயணி மாதிரி போக வேணும் . இஞ்சை பாங்க்ல ஐம்பது ,அறுபது இலட்சம் காட்ட வேணும் என்னட்டை எங்கால?"

"இந்தக் காணியை வித்துப் போட்டு போங்கோ"

எனக்குச் சிரிப்பு வந்தது.

"மாமா ஒரு பாட்டுத் தெரியுமோ"

"என்ன பாட்டு?"

"காணியை வித்தன்....
பூமியை வித்தன் ....
கட்டின பெண்டிலின் தாலியை வித்தன்......
போட்டேன் சுருட்டுக் கடை கொழும்பில....
அது கொழுந்து விட்டு எரியுதடா கலவரத்தில
ஆடிக் கலவரத்தில "....

நாகராசா மாமா கெக்கட்டம் விட்டுச் சிரித்தார்.

"உதெல்லாம் உங்களுக்கு நல்ல ஞாபகமென்ன . இஞ்சை மாஸ்ரர் எனிவரும் காலம் கஸ்ரமாக இருக்கும். "

"மாமா அங்க இதைவிட கஷ்டம்.அகதி விசா அடிக்க ஒரு கோடி வேணுமாம்."

"எனக்கு தெரிஞ்ச ஒருவர் 28 இலட்சம் செலவழித்து போய் ஒரு மாதத்தில் திரும்பி வந்துட்டார்."

"ஏன்?"

"வேலை இல்லையாம், கூப்பிட்டவர் இவைக்கு செலவழிக்க கஸ்ரப்பட்டாராம். மரியாதை கெட முன் இவர் திரும்பி வந்துட்டார். இப்ப பதினெட்டு இலட்சம் கடன்.அதை எப்படிக் கட்டிறதெண்டு மனிசன் விசர் பிடிக்காத குறையாத் திரியது. "

"இது ஒரு வியாதி கண்டியளோ "

மாமா சிரிக்கிறார்.

இந்த வியாதி எல்லாத் தமிழரிடம் பரவி இருக்கிறது.சரியான முடிவு தெரியாமல் கனடாவுக்குப் பயணிப்பது ஆபத்தாக முடியலாம். இதன் சாத்தியம் சிக்கலானது.

அகதி விசா கிடைக்காவிட்டால் களவாக வேலை செய்ய வேண்டும். இதற்கு உத்தரவாதம் இல்லை. விசேட சலுகைகள் கிடைக்காது.பிடிபட்டால் திருப்பி அனுப்பி விடுவார்கள். அத்தோடு எம்மை எடுத்தவர்களின் இருப்பையும் பாதிக்கும் .

கனடாப் பிரதமர் இலங்கைத் தமிழருக்கு சாதகமானவர்தான். ஆனால் அடுத்த ஆட்சியில் புதிய பிரதமர் வந்து எல்லாவற்றையும் கட்டுப்படுத்தினால், எல்லாம் தவிடுபொடியாகி விடும்.இது சிக்கல் மிக்க பயணமாகவே அமையும்.

இன்னும் இலங்கை இதிலே கவனம் செலுத்துவதாக இல்லை. மூளைசாலிகள் வெளியேற்றம் நாட்டின் அபிவிருத்தியைப் பாதிக்கும் என்பதை முன்னொரு பதிவில் சொல்லி இருக்கிறேன்.

இலவசக் கல்வி மூலம் உயர்கல்வி, பொறியியல் கல்வி, மருத்துவக் கல்வி வரை கற்றவர்கள் எந்தவிதத் தயக்கமின்றி வெளியேறுகிறார்கள். உள்நாட்டுக்கான தமது பயன்பாட்டை வழங்கவேண்டும் என்ற நேர்மனப்பாங்கு அவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை.அல்லது அரசு இலவசக் கல்விக்காக இவர்களுக்கு செலவிட்ட பணத்தை இவர்கள் திருப்பிச் செலுத்திவிட்டுத்தான் நாட்டை விட்டு வெளியேறவேண்டும் என்று சட்டம் இயற்ற வேண்டும்.

நாகராசா மாமா விழுதேங்காய் பொறுக்கப் போய்விட்டார். நான் மீண்டும் கதியால் கம்பைக் கட்டத் தொடங்கினேன்.

# ஊர்ப்புதினம்



பாகம் 2

○ இராகவன்

மற்றப்படத்தில ஒராள் கூலிங் கிளாஸோட ஒரு லைற்போஸ்ற்ரைப் பிடிச்சுக்கொண்டு நல்ல பட்டர் கலரில கோட் சூட்டோட நிண்டார். அவரை ஆரெண்டு நவண்ணாட்டக் கேட்டன். அந்தாள் விழுந்து விழுந்து சிரிச்சிட்டு, "உந்தாள் தான்ராப்பா சிவாஜி கணேசன்" எண்டு சொல்லிச்சுது. எனக்கு சிவாஜியை வடிவாத் தெரியும். ஏனெண்டால் நான் அப்ப பாத்த படம் முழுக்க சிவாஜியின்ர படங்கள்தான். ஒரு படத்திலயும் அந்தாள் கூலிங் கிளாஸ் போடேல்ல. கோட் சூட்டோடையும் வரயில்ல. அதால அந்தப் படத்தில நிக்கிறது சிவாஜி இல்லையெண்டது எனக்கு வடிவாத்தெரியும். அதால, "இல்லையில்லை உது சிவாஜியில்லை" எண்டு நான் சொன்னன்.

"நீ ஆள் விசயகாரன்தான். உவர் தான்ரா எம்ஜியார்" எண்டு நவண்ணா சொன்னார். எனக்கு அண்டையிலயிருந்துதான் எம்ஜியார், அண்ணாத்துரை ரண்டு பேரையும் தெரியவந்தது. நவண்ணாவிட்ட இன்னொரு பழக்கமிருந்தது. அதுதான் பாட்டுப் புத்தகங்களை வாங்கிச் சேர்த்து வைக்கிற



31

பழக்கம். என்ர இளைய அண்ணனும் பாட்டுப்புத்தகம் வாங்கிச் சேர்க்கிறவன் தான். ஆனால் நவண்ணா அளவுக்கு இல்லை.

பில்லா, பொல்லாதவன், காளி, வாழ்வேமாயம், தாயில்லாமல் நானில்லை, அவள் ஒரு தொடர்கதை, நீயா?, அந்தரங்கம் ஊமையானது, நெஞ்சில் ஆடும் பூவொன்று எண்டு நவண்ணாட்ட எக்கச்சக்கமான பாட்டுப் புத்தகங்கள் இருந்திச்சுது. எல்லாத்திலயும் அவன் தன்ர பெயரைக் 'கீழ்க்கரவை நவம்' எண்டு எழுதியிருப்பான். அதுதான் பாட்டுப் புத்தகங்களின் பொற்காலம் எண்டு சொல்லலாம். பாட்டுப் புத்தகத்தின்ர முகப்பிலயிருக்கிற கமல், ரஜினி, ஸ்ரீதேவி, சிறிப்ரியா, சரத்பாபு எண்டு அந்தந்தப் படங்களில நடிக்கிற நடிக, நடிகையின்ர படங்கள் கடுஞ்சிவப்பு, மெல்லிய சிவப்பு, ஊதா, மண்ணிறம், நீலம், கறுப்பு வெள்ளையெண்டு விதவிதமான நிறங்களிலயிருக்கும். அதுகும் கண்ணுக்குக் குளிர்ச்சியாப் பாக்க நல்ல வடிவாத்தானிருக்கும். நவண்ணாவைப் பாத்துத்தான் நானும் பாட்டுப்புத்தகங்கள் சேர்க்க வெளிக்கிட்டனான்.

என்ர காலத்தில பாட்டுப் புத்தகங்களெல்லாம் பேப்பர்த் தட்டுப்பாட்டால் கோடடிச்ச தாளிலதான் வரத் தொடங்கிச்சுது. அதுக்கு முந்தி லக்ஸ்மி ஸ்ரோர்ஸில பழைய பாட்டுப் புத்தகங்களெல்லாம் இருந்திச்சுது. தேவையானதை உள்ளபோய்த் தேடியெடுக்கோணும். வயது போன ஒரு ஐயா தான் இருப்பார். பாட்டுப் புத்தகம் எண்டு கேட்டால் மேலால கொஞ்சத்தைக் கொண்டந்து போடுவார். அதெல்லாம் என்னிட்ட இருக்கிறதாயிருக்கும். தேடிப்பாக்கட்டுமோ? எண்டால் ஆள் கொஞ்சம் சினக்கும். நல்ல மூட்டிலயிருந்தால் தேடிப்பாக்கவிடுவார். இந்த லக்ஸ்மி ஸ்ரோஸ் நெல்லியடியில பேமஸா ஒரு புத்தகக்கடை. அதைப்பற்றி வாற கிழமை சொல்லுறன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org